GOKULAM

பிப்ரவரி 2010 ▪ 80 பக்கங்கள் ▪ விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

- கறுப்புக்குப் பிடிக்காத வெள்ளை!
- விண்வெளிக்கு லிஃப்ட்!



பேர் சொல்ல பேத்தி!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1451


1452


1453


1454


1455


1456


1457


1458


1459


1460


1461


1462


1463


1464


1465


1466


1467


1468


1469


1470


1471


1472


1473


1474


1475

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கல்கி நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

பிப்ரவரி 2010 மலர் : 28 இதழ் : 1

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



வெற்றியைச் செதுக்கும் காலம்!

ஓட்டப் பந்தய வீரர்களைக் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா? முதலில் அவர்கள் மெதுவாகத் தான் ஓடத் தொடங்குவார்கள். பிறகு கொஞ்சம கொஞ்சமாக வேகத்தை அதிகரித்துக் கொண்டே போவார்கள். வெற்றிக்கான இலக்கை எட்டுவதற்குச் சற்றுமுன், அபரிமிதமான வேகத்தில் ஓடுவார்கள்; வெற்றி பெறுவார்கள்.

படிப்பும் இப்படிப்பட்டதுதான். உங்கள் கண்ணெதிரே இப்போது, தேர்வுக்கான அட்டவணை மட்டும்தான் தெரிய வேண்டும். உங்களின் முழுச் சிந்தனையும், எண்ணங்களும் பாடத்திலேயே ஊன்றியிருக்க வேண்டும். விளையாட்டை கொஞ்சம் ஓரங்கட்டிவிட்டு, முழுமூச்சாகத் தேர்வுக்குத் தயாராகுங்கள்.

ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில், வெற்றியைத் தீர்மானிப்பது கடைசி வினாடிகள்தான். எனவே, உங்கள் நேரத்தை முழுமையாகப் படிப்பதற்குப் பயன்படுத்துங்கள். வெற்றி உங்கள் எதிரே காத்திருக்கிறது. அதற்காக உங்களைச் செதுக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்கிற முனைப்புடன் படியுங்கள். நிச்சயம் வெற்றி உங்களுக்குத்தான்.!



அன்புடன்,
கோகூ

காலில் கடித்த பாம்பு!

"வாரும், வயல் பக்கமா போய்ட்டு வருவோம்."

ஊரிலிருந்து வந்திருந்த நண்பரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் புலவர் தனுஷ்கோடி.

இரவின் தடமாய் இலைகளில் தேங்கியிருந்த பனித்துளிகளில், சூரியனின் ஒளி நாட்டியம் நடந்து கொண்டிருந்தது.

சலசலத்து ஓடிய கால்வாய்... பசுமை போர்த்திய வயல்வெளி... நாரைகள்... குருவிகள்... என்று வசீகர இயற்கை!

"என்னவே... சத்தமில்லாம வரீரு."

கேட்ட புலவரிடம் சொன்னார் நண்பர்:

"எப்படிப் பேச? பூவுல வண்ணத்துப் பூச்சி உக்காந்திருக்கு. வண்டு பாடினாலும் அசையாத அது, நம்ம குரல் கேட்டுப் பறந்தோடுது. அந்த அமைதியும், அழகும் கெட்டுடு மோன்னுதான் மௌனமா வாரேன்."

நண்பர் சொன்னதும் கலகலவென்று நகைத்தார் புலவர்.

"இந்த அமைதிய ரசிக்கத்தான் வந்தேன்னு சொல்லுமே. தப்பில்லே... மனுஷனுக்கு அமைதியைப் பார்த்தா ஏதோ பயம். அதான் எதையாச்சும் பண்ணி சத்தம் எழுப்பிட்டேயிருக்கான்." சொல்லிக் கொண்டே நடந்த புலவர் "ஆ" என்றார். உடன் வந்த நண்பர் "என்னாச்சு" என்றதும், புலவர் சொன்னார் :

"மூக்காலைக் கொண்டு
மூவிரண்டு ஊருக்குப் போகையில்
அக்காலை ஐந்தலை நாகம்
அழுந்தக் கடித்ததுவே!"

நண்பர் திகைத்துப் போனார். 'பாம்பு எங்கே?' என்ற கவலையுடன் சுற்று முற்றும் பார்த்தார். அதைக் கவனித்த புலவர் கேட்டார் :

"என்ன தேடுறீரு?"

"பாம்பு கடின்னா, ஏதாச்சும் மூலிகை பிழிய வேணாமா? அதான்" அவர் முடிக்கும் முன்பாக பதிலும் சொன்னார் புலவர் :

"பத்துரதன் புத்திரனின்
சத்துருவின் மித்திரனின்
பத்தினியின் காலெடுத்துத் தேய்"

அதைக் கேட்ட நண்பர் மேலும் குழம்பினார்.

"என்னப்பா இது? பாம்பு கடிக்கு மூலிகை சொல்வேன்னு பார்த்தா, வேற என்னவோ சொல்ற! எனக்கு ஒண்ணுமே வெளங்கலை."

அருகிலிருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்த புலவர், தன் இடது காலை உயர்த்தி அதில் குத்தியிருந்த நெருஞ்சி முள்ளை எடுத்து வீசினார். பிறகு சொன்னார் :

"கம்பை ஊன்றி வந்ததால் மூணு கால், மூவிரண்டு, ஆறு. ஆத்தூர். ஐந்தலை நாகம்னா நெருஞ்சி முள். ஆத்துக்கு கம்பு ஊனி நடக்கும் போது கால்ல நெருஞ்சி முள் குத்திடுச்சுன்னேன்."



''அப்ப, அடுத்துச் சொன்னது.'' வினவினார் நண்பர்.

''அதுவா! பத்துரதன்னா தசரதன். (தசம்-பத்து) அவனோட மகன் ராமன். ராமனோட பகைவன் ராவணன். அவனுக்கு நண்பன் வாலி. வாலியின் மனைவி தாரை. 'தாரை'ல காலை எடுத்துட்டா, தரை. காலை தரையில் தேய். அதான் மருந்து!''

''யப்பா... 'நெருஞ்சி முள் குத்தினா, முள்ளை வீசிட்டு, காலை தரைல தேய்'னு சொல்லலாம்ல. இப்படி படுத்துறியே!''

''அதுசரி. ஒரு நெருஞ்சி முள் விஷயத்துல மொத்த ராமாயணமும் வந்துச்சே. அதுல்ல அழகு!'' புலவர் சொல்ல, அதை ஆமோதித்துச் சிரித்தார் நண்பர்.

கல்கி
கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-


கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32


குழந்தைகளின் குதூகலம்!

வானியல்


புதிய பகுதி

விண்வெளிக்கு லிஃப்ட்!





* சிரியஸ்



* கார்பன் நானோ டியூப்

பிரபஞ்சம், ஸ்பேஸ்... என்று வெவ்வேறு பெயர்களால், குறிப்பிடப் படும் விண்வெளி 1800 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்கிறார்கள். இதில் பல பால்வழி மண்டலங்கள், விண்மீன்கள், சூரியக் குடும்பங்கள்... எனப் பல அடங்கி யுள்ளன. இவற்றில், நம் 'சூரியக் குடும்பம்' இருப்பது 'பால்வழி மண்ட லம்'. இந்த விண்வெளியின் சுவாரஸ் யங்களை நாமும் அறிவோமா? (ஆர்.)


விண் மின் தூக்கி

மின் தூக்கி எனப்படும் லிஃப்டில் விண்வெளிக்குப் போக முடியுமா? முடி யும் என ஜப்பான் விஞ்ஞானிகள் நிரு பித்துள்ளனர். மண்ணிலிருந்து விண்ணிற் குப் பாலம் அமைக்க 'விண் மின்தூக்கி' (space elevator) பயன்படுகிறது. இந்த மின் தூக்கிகளைத் தாங்கிச் செல்லுகின்ற வலிமையான கேபிள்களைத் தயாரிக்க 'கார்பன் நானோ டியூப்'களை ஜப்பான் நாட்டு விஞ் ஞானி 'சுமியோ லிஜிமா' கண்டுபிடித்தார். இந்த டியூப், உலோ கத்தை விட நூறு மடங்கு வலிமையானது.

இந்த மின் தூக்கிகள் மின்சாரம் மூலம் இயங்கக் கூடியவை. மின் தூக்கியில் அறைகள் இணைக்கப்பட்டு, இவை கேபிள் மூலம் பொருத்தப்பட்டுள்ளன. இதில் ஐந்து அறைகள் கொண்ட சிறிய வீடு போன்ற அமைப்பு காணப்படுகிறது. மணிக்கு 190 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடிய இந்த விண் மின் தூக்கியின் எடை 20 டன். ராக்கெட்டை விடச் செலவு குறைவு என்பதுதான், இதன் சிறப்பம்சம்! இவை இன்னும் பயன் பாட்டுக்கு வரவில்லை.

விண்ணில் குரைத்தவன்!

முதன் முதலாக விண்ணுக்குச் சென்ற



* நட்சத்திரங்கள்



* ஸ்புட்னிக் 2



* லைகா

விலங்கு 'லைகா' என்னும் நாய். 1957ஆம் ஆண்டு சோவியத் விண்கலத்தில் இது விண்வெளிக்குச் சென்றது. 'லைகா' என்னும் பெயருக்கு 'குரைப்பவன்' என்று பொருள்.

'சிறிய இடங்களில் தங்குவது, விண் கலங்கள் எழுப்பும் கடுமையான ஒலியைக் கேட்டுத் தாக்குப்பிடிப்பது, 'ஜெல்' வகை யான உணவுகளைச் சாப்பிடுவது... என 'லைகா'வுக்கு பலவிதமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் இதன் உடலில் அதிகரிக்கும் இரத்த அழுத்தம் பற்றிய சோதனைகளும் நடத்தப்பட்டன.

விண்வெளிக்குச் செல்வதற்கு முன்பாக 'லைகா'வைத் வீட்டுக்கு அழைத்துச் சென்றார் விஞ்ஞானி டாக்டர் 'விளாகிமிர் யஸ்டோவ்ஸ்கி'. லைகாவைத் தம் குழந்தைகளுடன் விளையாட வைத்தார். இதுவே லைகாவின் இறுதி விளையாட்டு.

அடுத்த நாள் விண்ணில் சென்ற லைகா திரும்பவே இல்லை. மனிதர்களின் விண்வெளிப் பயணத்துக்கு முதற்படியாக, லைகா தன்னுயிரை ஈந்தது. ரஷ்ய அரசாங்கம் லைகாவுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளது.

'சிரியுஸ்'

இரவு நேர வானில் ஒளிரும் நட்சத் திரங்களில், மிகவும் அதிகமாக ஒளிரக் கூடியது 'சிரியுஸ்' என்னும் நட்சத்திரம். இதற்கு நாய் நட்சத்திரம் என்ற பெயரும் உண்டு. சாதாரணமாகப் பார்க்கும் போது இது, ஒரு நட்சத்திரமாகத் தெரியும். ஆனால், இவை சிரியுஸ் ஏ, மற்றும் வெள்ளைக் குள்ளனாக விளங்கக் கூடிய சிரியுஸ் பி என்னும் இரண்டு நட்சத்திரங் கள். இவற்றில் சிரியுஸ் ஏ சூரியனை விட இரண்டு மடங்கு பெரியது. சூரியனை விட 25 மடங்கு ஒளிரும் தன்மை கொண்டது.

இது தோன்றி ஏறக்குறைய 200 முதல் 300 மில்லியன் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்கின்றனர். சிரியுஸ் ஏ, பி என்னும் இந்த இரண்டு நட்சத்திரங்களின் இடைவெளி, சுமார் 49.9 ஒளி ஆண்டுகள். 'சிரியுஸ்' என்பதற்கு கிரேக்க மொழியில் 'ஒளிரும்' எனப் பொருள்; அரபி மொழியில் இது ஆஷ்-ஷீரா. அதாவது 'தலைவர்'. சமஸ் கிருத மொழியில் 'மான் வேட்டைக்காரன்' என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது. ஜப்பானிய மொழியில் 'அபோஷி' அதாவது 'நீல நட்சத்திரம்'.

முனைவர் ஆசுரா

ராகவன்

'எங்க தாத்தா, என்னை உட்கார வைச்சு நிறைய கதை சொல்லுவார். ராமர், கிருஷ்ணர், பிள்ளையார், அனுமான்... இப்படி நிறைய கதை சொல்லிருக்கார். புதுசு புதுசா விளையாட்டு சொல்லித் தருவார்' இப்படி குழந்தைகள் சொல்லக் கேட்டிருப்போம். ஆனால், தான் பார்த்தேயிராத தாத்தாவைப் பற்றி, ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார் ஒரு சிறுமி. அந்தப் பெண், அமெரிக்காவில் உள்ள நியூஜெர்ஸியில் வசிக்கும் சஹானா ஜெயராமன்!

ஒன்பதாம் நிலையில் பயிலும் சஹானா, தன்னுடைய கொள்ளுத் தாத்தாவைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். பள்ளியில் படிக்கும்போதே, புத்தகம் எழுதுவது என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது? அதைப் பற்றிச் சொல்கிறார் சஹானா :

"கொள்ளுத் தாத்தாவைப் பற்றி என்னுடைய பாட்டியும், தாத்தாவும் சொன்ன விஷயங்கள் மிகவும் ஈர்த்தன. மிகப் பெரிய மேதையாகவும், சிறந்த ஆசிரியராகவும், தூய பக்தராகவும், சிறந்த குருவாகவும் தேர்ந்த எழுத்தாளராகவும், பல மொழிகளில் திறன் பெற்றவராகவும் அவர் இருந்தார் என்ற செய்தியே என்னை மிகவும் ஈர்த்தது.

அதனால் அவரைப் பற்றிய செய்திகளை மேன்மேலும் தேடித் தெரிந்து கொள்ள ஆரம்பித்தேன். தாத்தாவின் முதன்மைச் சீடரும் நண்பருமான ஆத்ரேயா உள்ளிட்ட சீடர்களையும், தாத்தாவுடன்


* சஹானா

பேர் சொல்ல

பேத்தி!

பணியாற்றியவர்கள், உறவினர்கள் என்று பலரையும் சந்தித்தேன். தி.நகர் ராமகிருஷ்ணா மடம் பள்ளியின் தலைமை ஆசிரியர் ராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத்தின் செயலாளர், மயிலை விவேகானந்தா கல்லூரியின் தலைவர்... என்று பல பொறுப்புகளை திறம்பட வகித்தவர் கொள்ளுத் தாத்தா... எளிமையும், பக்தியும், ஞானமும் மிக்கவர் என்றெல்லாம் அறிந்தேன். அவற்றைப் பற்றி யோசிக்க யோசிக்க, என்னுடைய கொள்ளுத் தாத்தா என்பதைவிட, மிகப் பெரிய ஞானாசிரியன் என்கிற பக்தி என்னுள் ஏற்பட்டது.

இந்த நிலையில்தான் "தாத்தாவைப் பற்றி இவ்வளவு செய்திகளைத் தெரிந்து வைத்துள்ள நீ, அதை ஏன் புத்தகமாக எழுதக் கூடாது?" என்று கேட்டார் அப்பா.

அப்பாவின் இந்தக் கேள்வி, எனக்குள் வெளிச்சத்தை ஏற்படுத்தியது. சுமார் ஒரு வருடத்துக்குமேல், சேகரித்த செய்திகளையெல்லாம், வெவ்வேறு தலைப்புகளின்கீழ் ஒழுங்குபடுத்தினேன். பிறகுதான் எழுத ஆரம்பித்தேன்.

"ஏன் தாத்தாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்? தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்?" என்றெல்லாம் கேட்காமல், நான் கேட்கக் கேட்க விஷயதானம் செய்தவர்கள் யாருக்குமேகூட நான் இப்படி ஒரு புத்தகத்தை எழுதுவேன் என்று தோன்றியிருக்காது. எனக்கே தோன்றாதபோது, வேறு யாருக்குத் தோன்ற முடியும்? "சொல்லப்போனால், இது என் கொள்ளுத் தாத்தாவின் புகழுக்கான அடையாளமல்ல. ஆனால், அவ்வளவு பெரியவரின் வம்சத்தில் பிறக்கும் பேறு எனக்கு வாய்த்ததை எண்ணி ஒரு நெகிழ்வு. அவ்வளவுதான்."

* 'அண்ணா' என். சுப்பிரமண்யம்




பதினைந்து வயதுச் சிறுமியான சஹானா கொள்ளுத் தாத்தா என்று வார்த்தைக்கு வார்த்தை குறிப்பிடும் அந்தப் பெரியவர் 'அண்ணா' என். சுப்பிரமண்யம். ஸ்ரீராம கிருஷ்ண மடம் வெளியிட்டுள்ள 80க்கும் மேற்பட்ட நூல்களுக்கு விளக்கங்களும், விரிவுரைகளும் எழுதியவர்.

பார்த்தேயிராத தன் கொள்ளுத் தாத்தாவைப் பற்றி, இப்படியொரு புத்தகம் எழுதியதன் மூலம், பேர் சொல்லும் பேத்தியாகி இருக்கிறார் அவர். வாழ்த்துகள் சஹானா!

போட்டி:

வாருங்கள் வாசகர்களே...
உங்கள் தாத்தாவைப் பற்றி...
'எங்க தாத்தா' என்ற தலைப்பில்...
கோகுலத்தில் இரண்டு பக்கங்களுக்கு மேல் போகாமல் (புகைப்படத்துடன்) நீங்களும் எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் கட்டுரைகளுக்குப் பரிசு உண்டு.



தேர்வுக்கு

ஆண்டுத் தேர்வு நெருங்கி விட்டது. 'படித்தது எல்லாமே மனசுல நிக்கணும்.... நல்ல மார்க் வாங்கணும்' என்கிற டென்ஷனும் துவங்கியிருக்கும். இந்த நேரத்தில் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், அவர்கள் நல்ல மதிப்பெண் பெற ஊக்குவிக்கவும் உதவும் உணவுமுறைகளை இப்போது பார்ப்போம்.

மூளை சீராக இயங்க அதிக ஆக்ஸிஜனும், சீரான ரத்த ஓட்டமும் அவசியம். எல்லாச் சத்துகளும் கொண்ட சமச்சீரான உணவு மட்டுமே மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். என்ன காரணமாக இருந்தாலும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. காரணம், காலை உணவுதான் உடலுக்கு அதிக சக்தியைத் தருகிறது. உடலின் இயக்கத்தைத் தூண்டி நாள் முழுவதும் உற்சாகமாக இருப்பதற்கு அடித்தளம் அமைக்கிறது.

தேர்வு நேரத்தில் காலையும் மதியமும் நன்றாகச் சாப்பிட வேண்டும். ஆவியில் வேக வைத்த இட்லி, இடியாப்பம், புட்டு காலை உணவுக்கும் இரவு உணவுக்கும் நல்லது. தேவைப்பட்டால், சப்பாத்தி, ரொட்டி, அரிசி தோசையை மாற்று உணவாக வைத்துக் கொள்ளலாம். பூரி, புரோட்டா, நூடுல்ஸ் வேண்டாம்.

'மன அழுத்தம்' நீங்க...

அரிசி சாதம், தக்காளி சாதம், பருப்பு சாதம், ரசம் சாதம், கீரை சாதம் மதிய உணவுக்கு நல்லது. புளியோதரை, லெமன் சாதம் போன்ற புளிப்புள்ள சாத வகைகளைத் தவிர்க்க வேண்டும். அதுபோல் இரவில் வயிறு முட்டச் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். இரவில் படுக்கச் செல்லும்போது பால் சாப்பிட வேண்டும். பாலில் உள்ள 'டிரிப்டோபென்' எனும் அமினோ அமிலம், மன அழுத்தத்தைத் தவிர்க்கும் அற்புத மருந்து. மூளையில் நினைவாற்றலுக்கு உதவும் நரம்பு செல்களை உறுதியாக வைத்திருப்பதும் இதுதான்.

தயிர் அவசியம்!

மதிய உணவில் தினமும் ஒரு பருப்பு, ஒரு கீரை, ஒரு காய், தயிர் இருக்க வேண்டும். காரட், பீட்ரூட், அவரை, முட்டைக்கோஸ் போன்ற அடர்ந்த நிறமுள்ள காய்கறிகள் தேர்வு நேரத்தில் ஏற்றவை. மூளையை இயக்குகின்ற வைட்டமின் சத்து, தாதுச் சத்து, இரும்புச் சத்து, புரதச் சத்து ஆகியவை இவற்றிலிருந்து கிடைக்கும். முக்கியமாக, வைட்டமின் ஏ நிறைந்த

முருங்கைக் கீரை கண்களுக்கு மிகவும் நல்லது. மாணவர்கள் அதிக நேரம் படிக்கும் போது கண்ணில் எரிச்சல் ஏற்படாமல் பாதுகாக்கும். தேர்வு நேரத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தத்தால் மாணவர்களுக்கு வயிற்றில் அதிகமாக அமிலம் சுரந்து அல்சர், அஜீரணம் போன்றவை தலைகாட்டும். தயிர், அமிலம் சுரப்பதைக் கட்டுப்படுத்துவதோடு, ஜீரண சக்தியை ஒழுங்குபடுத்தும்.

'பாதாம்' பலம்!

இடைப்பட்ட நேரங்களில், குறிப்பாக மாலை நேரத்தில் சுண்டல், வேக வைத்த வேர்க்கடலை, பாதாம் பருப்பு, தேனில் ஊற வைத்த பேரீச்சை, அத்திப்பழம், முளை கட்டிய பயறுகள், காய்கறி சாலட், பழ சாலட் போன்றவற்றைச் சாப்பிடலாம். பாதாம் பருப்பில் உள்ள 'செலினியம்', நினைவாற்றலுக்கு மிக நல்லது. ஊற வைத்த பாதாமை அரைத்து சூடான பாலில் கலந்து தினமும் இரண்டு வேளை குடிப்பது படித்தது மறக்காமல் இருக்க உதவும்.

'பழம்' பெஸ்ட்!

தேர்வு நேரங்களில் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள, தினமும் ஏதாவது ஒரு பழம் சாப்பிட வேண்டும். பழங்களில் உள்ள வைட்டமின் சி இதற்கு உதவுகிறது. மேலும் பழங்களில் உள்ள நார்ச்சத்து ஜீரணத்துக்கு உதவுகிறது. பழங்களில் ஃப்ரெஷ் பழங்கள், உலர் பழங்கள், ஃப்ரிட்ஜில் பாதுகாக்கப்பட்டவை எல்லாமே சத்துள்ளவை தான். என்றாலும், பழங்களை சாறு பிழிந்து சாப்பிடுவதைவிட, அப்படியே கடித்துச் சாப்பிட்டால் அவற்றில் உள்ள நார்ச்சத்து முழுவதுமாக உடலில் சேரும். பழங்களில் வாழைப்பழம், திராட்சை, ஆரஞ்சு, ஆப்பிள், மாதுளை, தக்காளி, பப்பாளி ஆகியவை உடனடியாக புத்துணர்வைத் தருபவை.

...ற்ற உணவுகள்!




தவிர்ப்பது நலம்!

தேர்வு நேரங்களில் பாட்டில்களில் அடைத்து விற்கப்படுகின்ற செயற்கைப் பழச்சாறுகளை சாப்பிடவேண்டாம். அதுபோல் குளிர்பானங்கள், மென்பானங்கள், பீட்ஸா, பர்கர் போன்ற துரித உணவுகளையும் தவிர்ப்பது நல்லது. இவற்றை அதிகமாகச் சாப்பிடும்போது மூளை மந்த

டாக்டர் கு.கணேசன்

மாகிவிடும். மனம் செலுத்தி, முனைப் பாகப் படிக்க முடியாது.



'சூப்' நல்லது!

மாணவர்கள் தூக்கம் வராமலிருக்க காபி, தேநீர் அருந்துவது வழக்கம். இவற்றால் கிடைக்கின்ற உற்சாகம் தற்காலிகமானது. இவற்றுக்குப் பதிலாக, இரவில் சூடான பால், லெமன் டீ, காலையில் வைட்டமின் சி நிறைந்த எலுமிச்சை பழச்சாறு அல்லது காய்கறி சூப், கீரை சூப் சாப்பிடலாம்.

ஒரு நாளில் எட்டிலிருந்து பத்து தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். இதனுடன் மோர், தயிர், இளநீர், பழச்சாறு அருந்தலாம். அதிக அளவில் தண்ணீர் குடிக்கும் குழந்தைகள் மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றலை அதிகமாகப் பெற்றுள்ளார்கள் என்பதற்கு அறிவியல் ஆதாரம் உள்ளது. மேலும், தண்ணீர் நிறையக் குடித்தால், படிக்கும் போது ஏற்படுகின்ற தலைவலியைக் குறைக்கும் என்பது கூடுதல் தகவல்.

நோ நான்வெஜ்!

படிக்கின்ற நேரத்தில் சிப்ஸ் போன்ற நொறுக்குத்தீனிகள் வேண்டாம். தேர்வு முடியும் வரை கொழுப்பு மிகுந்த அசைவ உணவுகள் வேண்டாம். அதுவும் இரவில் நிச்சயம் வேண்டாம். கொழுப்புணவு மூளையை மழுங்கடித்து தூக்கத்தை வரவழைக்கும், மேலும், நினைவாற்றலை படிப்படியாகக் குறைத்துவிடும். எப்போதும் இது நல்ல டயட் என்றாலும், தேர்வுக் காலத்தில் மிக மிக முக்கியம்!



வாழ்த்துகள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 30ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) வெர்கோயான்ஸ், 2) காஞ்சிபுரம், 3) கம்பர் 4) விஸ்வேஸ்வரய்யா, 5) சாக்ரடீஸ்

பரிசு பெறுவோர் :

1.பெ.இன்னிசை வேந்தன், புதுவை, 2.கு.வஜ்ரமாலா, புதுக்கோட்டை 3.ஏ.புஷ்பராஜ், வேலூர் 4.பி.தாமோதரன், சென்னை, 5.சி.திருமலையப்பன், கடையநல்லூர் 6.ஆர்.ஜி.மோனிஷா, திருச்சி, 7.ஆர்.சுகைல் அகமது, கம்பம், 8.பா.ரா.தேவயானி தஞ்சாவூர், 9.பா.கிருபாகர், கீழ்ப்பென்னாத்தூர், 10.ஏ.இ.சுபஸ்ரீ, திருச்செங்கோடு

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில்,

டியர் குட்டீஸ்...

படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.



● ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

● பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஊரின் எல்லையில் எழிலான
ஓடைக் கரையில், முள்கொண்ட
காரைப் புதரில் வசித்ததுவாம்
குறும்பு மிகுந்த கவுதாரி!

காரை முள்ளோ மிகக்கூர்மை;
காயப்படுத்தும் ; அதனாலே
ஊரார் நெருங்கி வரமாட்டார்;
உகப்பாய் வாழ்ந்தது கவுதாரி!

பறவை இனம்தான் என்றாலும்
பறக்கும் சக்தி மிகக்குறைவு!
சிறிது தொலைவே பறக்கும்; பின்
சோர்ந்து நிலத்தில் விழுந்துவிடும்.

மனிதர் எவரும் வந்தாலோ
மறைந்து கொள்ளும் புதருக்குள்.
துளியும் சத்தம் காட்டாமல்
தன்னை ஒளிக்கும் மௌனத்தில்!

அருகே செல்லும் மனிதர்கள்
அறியாததனால் தன்னுள்ளே
பெருமிதம் கொண்டது கவுதாரி
புத்திசாலி தானென்று!

காட்டில் அலைந்தும் பயனின்றி
கவலை ததும்ப ஒருவேடன்
ஓடைப்பக்கம் வந்திட்டான்
ஒளிந்து கொண்டது கவுதாரி

'அசட்டு வேடன் போய்விட்டான்.
அறிவு மிகுந்தவன் நான்' என்று




பி.புலேந்திரன்

அதிரச் சிரித்தது கவுதாரி.
அதனைக் கேட்டான் அவ்வேடன்.

திரும்பி வந்தான்; புதருக்குள்
நீட்டிய கம்பால் குத்திட்டான்.
மருண்டு பறந்த கவுதாரி
மெலிந்து மண்ணில் விழுந்ததுவே.

வேட்டை இல்லாக் கவலையிலே
வந்த வேடன் மகிழ்ந்தனனே.
ட்டிப் பிடித்தான்; கால்கட்டி
தோளில் போட்டு நடந்தனனே.

வாயைக் கட்டி இருந்தாலே
ம்பு எதுவும் நெருங்காது.
வாயால் கெட்டேன்' என்றபடி
வருந்தித் தவித்தது கவுதாரி!



அதிரச் சிரித்த கவுதாரி!

இந்தியாவில் உள்ள மாநிலங்களைப் பற்றிய அறிமுகமாக வெளிவந்த, இந்திய நாடு தொடரின் இரண்டாம் பாகம் இது! (ஆர்.)



* 'காஸிரங்கா' சரணாலயம்

மீண்டும் உங்களுக்காக...

தேயிலை

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள ஏழு மாநிலங்களை 'வட கிழக்கு இந்தியாவின் ஏழு சகோதரிகள்' என்பர். அவற்றில், பரப்பளவில் பெரியதும், முக்கியமானதும் அஸ்ஸாம். 'காமரூபம்' என்று முன்னாளில் அழைக்கப்பட்ட பகுதி இதுதான். அஸ்ஸாம் சுமார் 78 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது.

இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் மற்ற மாநிலங்களை, அஸ்ஸாம் இந்திய நிலப் பகுதியுடன் இணைக்கிறது. இந்த மாநிலத்தின் மிகப் பெரிய நகரம் கௌஹாத்தி. ஆனால், அஸ்ஸாமின் தலைநகரம் திஸ்பூர். அஸ்ஸாமிய மொழியும், போடோ மொழியும் இம்மாநிலத்தின் அதிகாரபூர்வ மொழிகள்.



* ஹுசாரி

இங்கு இரண்டு கோடியே 66 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் ஆண்கள் சுமார் ஒரு கோடியே 38 லட்சம். பெண்கள் ஒரு கோடியே 28 லட்சம். ஆயிரம் ஆண்களுக்கு 932 பெண்கள் என்ற விகிதத்தில் மக்கள் தொகை உள்ளது. மாநிலத்தின் கல்வி அறிவு 63 சதவிகிதம்!

கி.பி. 1228 முதல் 1826 வரை இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் 'ஆகோம்' வம்சத்தினர் என அழைக்கப்பட்டனர். அதிலிருந்துதான் அஸ்ஸாம் என்ற பெயரும் தோன்றி இருக்கும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஆனால், நான்காம் நூற்றாண்டிலேயே காமரூப தேசத்தை வர்ம வம்ச அரசர்கள் ஆண்டதாக சரித்திரம் சொல்கிறது.



* 'மஜுலி' விழாவில்...

பன்னிரண்டாம் நூற்றாண்டில் பல பகுதிகளாகச் சிதறுண்ட காமரூபம், இறுதியாக 1839ல் ஆங்கிலேயர் வசமாகின. அதாவது, வங்காள ராஜதானியின் பகுதியானது அஸ்ஸாம்.

ஆங்கிலேயர்கள், அஸ்ஸாமின் தேயிலை வளத்தைப் பார்த்துவிட்டு 1839ல் 'தி அஸ்ஸாம் கம்பெனி' என்ற

நிறுவனத்தைத் துவக்கி, உள்ளூர் மக்கள் தேயிலை பயிரிடு வதை சட்டம் போட்டுத் தடை செய்தார்கள்! வேலை செய்ய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்களை அழைத்துச் சென்றார்கள். பிறகு, சுதந்திர இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலம் 1950 ஜனவரி 26ஆம் தேதி உரு வானது. இமயத்தில் கிளம்பும் வற்றாத ஜீவ நதியான பிரம்மபுத்ரா, பல கிளை ஆறுகளாகப் பிரிந்து, இம் மாநிலத்தில் சுமார் 80 முதல் 100 கி.மீ. அகலமும், ஆயிரம் கி.மீ. நீளமும் கொண்ட பிரம்மபுத்ரா பள்ளத் தாக்கை வளம் பெறச் செய்கிறது. மற்ற முக்கிய நதிகள்; மனஸ், சுபன்ஸ்ரீ, சோனை.



* 'காமாக்யா' ஆலய முகப்பு

பிரதமரின் தொகுதி

அஸ்ஸாம் மாநிலத்தில் 25 ஆயிரம்

தசம்!



கிராமங்களும், 125 நகரங்களும் இருக்கின்றன. மாநில சட்டசபை 126 உறுப்பினர்களைக் கொண்டது. அஸ்ஸாம் மக்கள் தங்கள் சார்பாக பாராளுமன்றத்தில் மக்களவைக்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறார் கள்; ராஜ்யசபைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 7. இன்றைய பிரதமர் மன்மோகன் சிங் அஸ்ஸாம் மாநிலத்தி லிருந்துதான் பாராளுமன்றத்தின் ராஜ்யசபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். காங்கிரஸ், பா.ஜ.க., அஸ்ஸாம் கண பரிஷத், தேசியவாதக் காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், சமாஜ்வாதி கட்சி ஆகியவை முக்கியமான அரசியல் கட்சிகள்.



* 'பிகு' நடனம்

பண்பாடு

முக்கியப் பயிரான நெல் சாகுபடியின் மூன்று

கௌதம் ராம்



* 'மனாஸ்' சரணாலயம்

வெவ்வேறு கட்டங்களில், மூன்று விதமான பிகு பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அவை 'பைசாகி பிகு', 'கார்த்திகா பிகு', 'மகா பிகு' ஆகியவை. நம் ஊரில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் சமயத்தில் அஸ்ஸாமில் 'பைசாகி பிகு' கொண்டாடுகிறார்கள். அங்கே கொண்டாடப்படும் மற்ற முக்கியமான பண்டிகைகள் : பதேலி, தேவத்வனி, மானசா மஜுலி, ரங்காலி உத்சவ்.

கௌஹாத்தி நகருக்கு அருகில் உள்ள நீலாசல் மலைப் பகுதியில் உள்ளது காமாக்யா கோவில்! இது 108



●பிரம்மபுத்திராவில் படகுப்போட்டி

சக்தி பீடங்களில் ஒன்று. இங்கே ஆண்டு தோறும் ஜூன் மாதத்தில் கொண்டாடப்படும் 'அன்பு பாசி மேளா'வின்போது பக்தர்கள் திரளாகக் கூடுவார்கள்.


'ஹுசாரி' என்பது அஸ்ஸாமின் சேர்ந்திசை நடனம். 'பிஹு' நடனம், பாடல்களும் தோல் இசைக்கருவிகளும் இணைந்த ஒரு பாரம்பரியக் கலை. நெசவும், எம்பிராய்டரியும் அஸ்ஸாமில் முக்கியமானவை. பிரம்பு மற்றும் மூங்கில் கொண்டு இவர்கள் செய்யாத பொருள் இல்லை. அஸ்ஸாமிய சுட்ட மண் சிற்பங்கள் தனித்துவம் வாய்ந்தவை. 'டோல், நாக்ரா, டாபா, கோல், மிருதங்கம், டிரம்ஸ்' போன்றவை இம்மாநிலத்தின் பாரம்பரிய இசைக் கருவிகள்.

இயற்கை வளம்

விளைநிலங்களில் 70 சதவிகிதம் அளவுக்கு நெல் பயிரிடப்படுகிறது. மலைப் பகுதிகளில் ஆரஞ்சு, வாழை, கொய்யா, அன்னாசி, மாம்பழம் போன்றவை விளைகின்றன. மூங்கிலும், வனவளமும் அஸ்ஸாமின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின் தேயிலை உற்பத்தியில் சுமார் 15 சதவிகிதம் அஸ்ஸாமின் பங்களிப்பு. நிலக்கரி, கச்சா எண்ணெய், எரிவாயு, சுண்ணாம்புக்கல் ஆகியவை அஸ்ஸாமின் கனிம வளத்தில் முக்கியமானவை. பர்மா எல்லையை ஒட்டி அமைந்துள்ள 'டிக்பாய்' எண்ணெய்க் கிணறு, உலகின் மிகப் பழைமையான எண்ணெய்க் கிணறுகளில் ஒன்று.

சுற்றுலா

காசிராங்கா தேசியப் பூங்கா, காண்டா மிருகங்களுக்கான சரணாலயம். மேலும், இங்குள்ள 'நெமிரீ தேசியப் பூங்கா' என்ற புலிகள் சரணாலயம், 'மனஸ்' வன சரணாலயம் ஆகியவை முக்கியமானவை. கௌஹாத்தி பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட கமர்ஷியல் மியூசியம், வரலாற்று மியூசியம், அஸ்ஸாம் அரசு குடிசைத் தொழில் மியூசியம் போன்றவை சுற்றுலாப்பயணிகள் காண வேண்டியவை. ஆண்டுதோறும், பிரமபுத்திராவில் அஸ்ஸாம் அரசு நடத்தும் படகுப்போட்டி மிகவும் பிரபலமானது. அஸ்ஸாமியர்கள் தங்கள் ஊரை 'குவா ஹாத்தி' என்றுதான் குறிப்பிடுகிறார்கள். குவாஹாத்தி என்றால் பாக்குச் சந்தை!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

பயோடேட்டா

✱ யானைக்குட்டி பிறந்து ஏழு மாதங்கள் ஆன பிறகுதான், புல், இலை, தழைகளைத் தின்னத் தொடங்கும்.

✱ மரத்தின் வயதை அதன் பட்டைகளை வைத்து அறிவதுபோல, யானையின் வயதை அதன் காது மற்றும் நகத்தை வைத்துக் கணக்கிடுகிறார்கள்.

✱ யானை நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் முதல் 225 லிட்டர் வரை தண்ணீர் குடிக்கும்.

✱ யானைத் தோலின் கனம் 2 செ.மீ. இருக்கும்.

✱ யானையின் துதிக்கையில் நான்கு லட்சம் தசை நார்கள் உள்ளன.

✱ விலங்குகளில், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ளது யானையின் பாலில்தான்.

✱ இன்ப, துன்பங்களிலும் மனிதனைப் போல் கண்ணீர் விடக்கூடிய விலங்கினம் யானை.

✱ பாபோப் (baobab) என்பது நீர்ச்சத்து மிகுந்த ஒருவகை மரம். இவ்வகை மரங்கள் ஆப்பிரிக்கக் காடுகளில் அதிகமாக இருக்கின்றன. காடுகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில், யானைகள் இந்த மரத்தின் பட்டைகளைப் பெயர்த்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும்.

✱ யானை கன்று ஈன்றதும் வெளிப்படுகின்ற சீம்பால், ஆயுர் வேத மருத்துவத்தில் சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுகிறது.

✱ ஆப்பிரிக்க யானைகளின் காதுகள் சுமார் இரண்டு மீட்டர் நீளம் கொண்டவையாக இருக்கும். அதோடு ஒப்பிடும்போது ஆசிய யானைகளின் காதுகள் சிறியவைதான்.


✱ கால்நடை மருத்துவர்கள், யானையின் நாடித் துடிப்பை, அதன் காதுக்குப் பின்னே உள்ள ரத்த நாளங்களைப் பிடித்துத்தான் அறிவார்கள்.

✱ பிறக்கும் போது, யானைக் குட்டியின் உடலில் ரோமம் இருக்கும். வளர வளர அது உதிர்ந்து விடும்.

✱ யானை ஒரு நிமிடத்துக்கு 10 தடவை சுவாசிக்கிறது.

✱ யானையின் லத்தி நிலத்துக்கு நல்ல உரம் என்பதால், அமெரிக்காவில் நல்ல விற்பனை நடக்கிறதாம்.

✱ யானை, அமைதியின்றி அங்குமிங்கும்





ம.விவேக், குட்டம்

கறுப்புக்குப் பிடிக்காத வெள்ளை!

ஓடி பத்திரமான இடத்தில் பதுங்கினால் புயல் வருவதற்கான அறிகுறி என்கிறார்கள்.

✸ அமைதி, சமாதானம் இதன் அடையாளமாக வெள்ளை நிறத்தைச் சொல்வோம். ஆனால், யானைக்குப் பிடிக்காத நிறம் இந்த வெண்மைதான்.

✸ கண்கள் சிறியதாக இருந்தாலும், யானை கூர்மையான பார்வைகொண்டது.

✸ யானைகள் நடனமாடும் என்பது வியப்பான செய்தி. ஒரு யானை கன்று ஈன்ற சமயத்தில், மற்ற யானைகள் பூமி அதிரக் குதித்து கும்மாளமிட்டு உரத்த குரலில் பிளிறி நடனமும் ஆடும்.

✸ யானைக்கு ஆறு முறை பற்கள் விழுந்து முளைக்கும். ●



முத்துச் சிதறல்!

மெத்தை விரித்த புல்லின்மேல்
முத்தைச் சிதறி வைத்ததாய்
புத்தம் புதிய அழகுடன்
பொலிகிறது பனித்துளி!

பளிங்கு தூளைப் போலவே
பனியைத் தூவும் மார்கழி
குளிரும் வாடைக் காற்றது
தெளிக்கும் பன்னீர்த் துளிகளாய்!

பருக்கைச் சோறு கிடப்பதாய்
பச்சை இலையில் தோன்றுமே.
நெருப்பு வெயிலைக் கண்டதும்
நெய்யைப் போல உருகுமே

வெள்ளையடித்த காட்சிபோல்
மலைகள் மின்னும் வெண்மையாய்...
கள்ளமற்ற பிள்ளைகள்
உள்ளம் போலத் தூய்மையாய்!

ஒளிரும் கதிரின் வெம்மையால்
உருகி வழியும் வெண்பனி
மிளிருகின்ற நதிகளாய்
மண்டலத்தில் பாயுமே!

விண்ணின் இரவுத் தாரகை
மண்ணில் உதிர்ந்து விட்டதோ?
வெண்மை மின்னும் பனித்துளி
பூக்கள் பெற்ற பரிசுகளோ?

பனியின் கடுமை தாக்கினால்
போர்வை தேடும் நம்முடல்.
பனியைப் போர்வை ஆக்கியே
பரவசிக்கும் மலையெலாம்!

- **விநாயகமூர்த்தி, மதுரை**



ஞானியார்!

தாவித் தாவிச் செல்லுவார்
தண்ணீர் கண்டால் நீந்துவார்
ஆவி போகக் கத்தியே
அருமை மழையை வேண்டுவார்!

முட்டை போன்ற விழிகளால்
முழித்து முழித்துப் பார்ப்பவர்
குட்டை குளங்கள் ஏரியில்
குதித்து ஆடும் தவளையார்!

பச்சை மேனி கொண்டவர்
பாம்பன் வாயில் மாள்பவர்
இச்சையாக நீர்நிலம்
இரண்டு இடத்தும் வாழ்பவர்!

நாக்கை நீட்டி இரையினை
நன்றாய்ப் பிடித்துத் தின்பவர்
தேக்கி வைத்த முட்டையைத்
தண்ணீர் மேலே பொரிப்பவர்

'வாயடக்கம் உண்டெனில்
வம்பு இல்லை' என்றொரு
தூய ஞானம் தருகிறார்
தவளையென்னும் ஞானியார்!

– ம.விவேக், குட்டம்

தோரண வாயில்!

சீருடை அணிந்து
பள்ளிக்குப் போகும்
சிட்டுக் குருவிகள் நாங்கள்!
ஆறறிவுடைய மானிடப்
பறவையின்
அக்கினிக் குஞ்சுகள் நாங்கள்!

'ஓரினம் அனைவரும் ஓர்குலம்' என்கிற
உணர்வுடன் வளர்பவர் நாங்கள்!
வேறிலை சாதி மதமெனக் கூடி
விளையாடும் சிறுவர்கள் நாங்கள்!

பாரதி பாடிய பாப்பாப் பாடலின்
பாட்டுடைத் தலைவர்கள் நாங்கள்!
நேருவின் வாழ்க்கைப் பாதையில் நீங்கா
நினைவிடம் பெற்றவர் நாங்கள்!

பேரறிவாளர் அப்துல் கலாமுக்குப்
பிடித்ததில் முதலிடம் நாங்கள்!
தோரண வாயிலாய், தூண்களாய்
நாட்டினைத்
தூக்கி நிறுத்துவோம் நாங்கள்!

– தளவை இளங்குமரன்,
செங்கல்பட்டு



மாய ஜன்னல்!

இரண்டு ஸ்வெட்டர், குல்லா, மஃப்ளர், காதுகளை மூடிக்கொள்வதற்குச் சிறிய பஞ்சுப் பொதிகள், கால்களுக்குக் கனமான காலணிகள்…

இத்தனையையும் அணிந்துகொண்ட பேராசிரியர் சந்திரசேகருக்கு லேசாக மூச்சு வாங்கியது.

மிகவும் கனமான உடைகளை அணிந்திருந்ததால், அவரால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை. சிரமப்பட்டு நகர்ந்துவந்து வாசல் கதவைத் திறந்தார்.

வெளியே எங்கு பார்த்தாலும் வெள்ளைப் பனி போர்த்தியிருந்தது. தார்ச்சாலை, அதன் இருபுறமும் நிற்கிற மரங்கள், செடிகொடிகள், கார்கள், புல்வெளிகள், வீடுகள் எனக் காணும் இடமெல்லாம் பனிமயம்!

சந்திரசேகர் பெருமூச்சுடன் தம்முடைய காரை நெருங்கினார். அதுவும் பனிப் பொழிவால் மூடப்பட்டு நின்றது. அதற்கென்று உள்ள விசேஷக் கருவியைக் கொண்டு பனியை மெல்ல விலக்க ஆரம்பித்தார்.

பக்கத்து வீட்டிலிருந்து வெளியே வந்தவர், அவரை விநோதமாகப் பார்த்தார், ''புரொஃபஸர், இந்தப் பனியில என்ன செஞ்சுகிட்டிருக்கீங்க?''

''காரை க்ளீன் பண்றேன்'' நிமிர்ந்து பார்க்காமல் சொன்னார் சந்திரசேகர்.

''எதுக்காக க்ளீன் பண்றீங்க? இப்ப எங்கயாவது போகப்போறீங்களா என்ன?''

''ஆமா, சிகாகோவுக்குப் போகணும், க்ளாஸ் இருக்கு.''

பக்கத்து வீட்டுக்காரர் வாயைப் பிளந்தார், ''என்ன விளையாடறீங்களா? நேத்து ராத்திரி முழுக்கப் பனி பெய்திருக்கு, ரோடெல்லாம் ஐஸ் கட்டியா உறைஞ்சுகெடக்குது, நீங்க அவ்வளவு தூரம் பயணம் செய்யறது ரொம்ப ஆபத்து.''

''உண்மைதான். ஆனா, ஸ்டுடன்ட்ஸ் காத்திருப்பாங்க, நான் கிளம்பறேன், பை'' என்றபடி காருக்குள் நுழைந்தார் சந்திரசேகர்,

நிஜம்தான்; சாலையெல்லாம் பனிக் கட்டிகள் உறைந்து ஆக்கிரமித்திருந்தன. அவற்றுக்கு நடுவே காரை ஓட்டிக்கொண்டு செல்வது மிகவும் சிரமமாக இருந்தது.

ஆனால், பேராசிரியர் சந்திரசேகர் அதைப்பற்றியெல்லாம் கொஞ்சமும் கவலைப்படவில்லை.





கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் கடும் பனிக்கு நடுவே பயணம் செய்த பிறகு, சிகாகோ பல்கலைக்கழகம் எதிர்ப்பட்டது. காரை நிறுத்திவிட்டுத் தம்முடைய வகுப்பறைக்குள் நுழைந்தார் சந்திரசேகர்.

அங்கே, இரண்டே இரண்டு மாணவர்கள் மட்டும் காத்திருந்தார்கள், ''ஹலோ புரபொஃஸர்.''

''ஹலோ'' உற்சாகமாகக் கையசைத்தார் சந்திரசேகர், ''இன்னிக்குப் பாடத்தை ஆரம்பிக்கலாமா?''



அடுத்த விநாடி, அவர்கள் வெளி உலகத்தை முற்றிலுமாக மறந்துவிட்டார்கள். படிக்கவேண்டிய பாடங்கள், கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள், இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டிய அறிவியல் மர்மங்கள் ஆகியவைதான் அவர்களுடைய மனத்தை முற்றிலும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

சந்திரசேகர் வகுப்பை முடித்துவிட்டு வெளியே வரும்போது, இன்னொரு பேராசிரியர் எதிர்ப்பட்டார், ''ஹலோ மிஸ்டர் சந்திரசேகர், சிகாகோவுக்கு எப்ப வந்தீங்க?''

''இப்பதான், கார்ல வந்தேன்.''

''அச்சச்சோ, வழியெல்லாம் பனி

என்.சொக்கன்

ரொம்ப ஜாஸ்தின்னு சொன்னாங்களே, எப்படி வண்டியை ஓட்டிக்கிட்டு வர முடிஞ்சது?''


''அதையெல்லாம் பார்த்தா முடியுமா? இங்கே இரண்டு ஸ்டூடண்ட்ஸ் காத்திருக்காங்களே.''



✱ சந்திரசேகர்



✱ ட்ஸாங் டாவ் லீ



✱ சென் நிங் யாங்க்

''இரண்டே இரண்டு மாணவர்களுக்காகவா இவ்ளோ தூரம் வண்டியை ஓட்டிக்கிட்டு வந்தீங்க? நம்ம கல்லூரி விதிமுறைகளின்படி, ஒவ்வொரு வகுப்பிலேயும் குறைஞ்சபட்சம் நாலு பேர் இருக்கணும், இல்லைன்னா நீங்க அவங்களுக்குப் பாடம் எடுக்க வேண்டியதில்லை'' என்றார் அந்தப் பேராசிரியர்.

''தெரியும்'' என்பதுபோல் புன்னகை செய்த சந்திரசேகர், ''ரூல்ஸ் கிடக்கட்டும். இந்த இரண்டு மாணவர்களின் ஆர்வத்தை நாம மதிக்க வேணாமா? மத்த மாணவர்கள் அக்கறை காட்டலைங்கறதுக்காக, இவங்களை ஏமாத்தறது சரியில்லையே.''

சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தார்.

அடுத்த பல மாதங்கள் அந்த இரு மாணவர்களுக்கும் அக்கறையோடு பாடம் சொல்லிக்கொடுத்தார். அவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் விஷயங்களைக் கற்றுக்கொண்டார்கள்; கேள்வி கேட்டார்கள்; பல விஷயங்களைப் பரிசோதித்துப் புரிந்துகொண்டார்கள்.

அந்த மூவருக்கும் அறிவியல் என்பது வெறும் படிப்பு அல்ல; அது ஒரு தவம், வேள்வி! தங்களைச் சுற்றியிருக்கிற எல்லாவற்றையும் புரிந்துகொள்ள உதவுகிற ஒரு மாய ஜன்னல்! அதைப் பார்த்தும் பார்க்காததுபோல் புறக்கணித்துச் செல்ல அவர்களுக்கு விருப்பம் இல்லை.

அந்தக் கடின உழைப்பு, அவர்களைக் கைவிடவில்லை. பின்னாட்களில் பேராசிரியர் சந்திரசேகர், அவரிடம் பாடம் கற்றுக்கொண்ட அந்த இரண்டு மாணவர்கள், 'ட்ஸாங் டாவ் லீ' (Tsung-Dao Lee), 'சென் நிங் யாங்க்' (Chen Ning Yang) ஆகிய மூவருமே, அறிவியல் சாதனையாளர்களுக்கான நோபல் பரிசு வென்றார்கள்.

இதுதான், அறிவியலைப் பாடமாக நினைப்பதற்கும், வாழ்க்கையாக எண்ணி அர்ப்பணித்துக் கொள்வதற்கும் உள்ள வித்தியாசம். 'இரண்டு மாணவர்கள்தானே?' என்று சந்திரசேகர் அலட்சியப்படுத்தவில்லை. ''ஊரெல்லாம் பனி பெய்யுது, இன்னிக்கு க்ளாஸ் வேண்டாம்'' என்று அந்த மாணவர்களும் உறங்கவில்லை. அதனால்தான் இப்படி ஒரு மிகப் பெரிய சாதனையை நிகழ்த்த முடிந்தது.

தேவை, கொஞ்சம் முனைப்பு, ப்ளஸ் தளராத உழைப்பு! இரண்டும் இருந்தால், அறிவியல் எதையும் சாதிக்க வைக்கும்! ●



கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...

- அழகு 26
- காரணம் 30
- அறிவுரைக் கதை 34
- அடையாளச் சின்னம் 38
- சம்பவம் 44
- படக்கதை 47
- செய்தி உலகம் 48
- மினி கதை 52

அழகு



மிகக் குறைந்த காலமே வாழக்கூடிய பூச்சியினங்களில் ஒன்று வண்ணத்துப் பூச்சி. அழகழகான நிறங்களில் திசையெங்கும் காணப்படுகின்ற வண்ணத்துப் பூச்சிகளில் இதுவரை 28,000 இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவற்றை 'லெபிடோபெட்ரா' (lepidopetra) என்ற பூச்சியினத்தில் ஒரு வகை என்கிறார்கள் ஆய்வாளர்கள். உடல் சூடு 30 டிகிரி செல்சியஸுக்குக் குறைவாக இருந்தால், இவற்றால் பறக்க முடியாது.

இந்த வண்ணத்துப் பூச்சிகளில் மிகச் சிறியது தென் அமெரிக்காவில் காணப் படுகிறது. 'வெஸ்டர்ன் பிக்மி ப்ளூ' (westem pygmy blue) என்று குறிப்பிடுகிறார்கள். அரக்கு நிறமும், நீல நிறமும் உடையதாக காணப்படுகிறது இந்த வண்ணத்துப் பூச்சி!

உலகின் மிகப் பெரிய வண்ணத்துப் பூச்சியாகக் கருதப்படுவது. 'குயின் அலெக் சாண்டிராஸ் பர்ட்விங்' (queen alexandras birdwing) எனப்படுவதுதான். இது நியூ கினி பகுதியில் காணப்படுகிறது. இவை ஒருபுறம் என்றால், நிறமற்ற இறகுகளோடும் வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன. இவற்றை 'கிளாஸ்விங்' (glasswing) என்கிறார்கள்.



பறக்கும் பூக்கள்!

இந்த வண்ணத்துப் பூச்சிகளை வளர்ப்பதில் பெரும் ஈடுபாடு கொண்டதால் 'வண்ணத்துப்பூச்சி ஆசிரியர்' என்றே பெயர் பெற்றுள்ளார் ஒருவர். அவர், மத்திய சீனாவில் ஹூனான் மாநிலம், லௌதி நகரில் வசிக்கும் 'சாங் சுன் ஹே'. அங்குள்ள இடைநிலைப் பள்ளி ஒன்றில் உயிரியல் ஆசிரியராகப் பணிபுரிகிறார் இவர்.

1998 முதல் 10,000 வண்ணத்துப் பூச்சிகளை தம் வீட்டிலேயே வளர்த்து வருகிறார். அதற்காகத் தம் வீட்டிலேயே மரப்பெட்டிகளில் கற்பூரம், ஆரஞ்சு மற்றும் டுன் மரங்களை வளர்த்து வருகிறார் சாங்.

வண்ணத்துப் பூச்சிகளைப் பற்றிப் படிக்கும் கல்விக்கு, 'லெபிடோபெட்ரி' அல்லது லெபிடோபெட்ராலஜி (lepidopetry / lepidopetrology) என்று பெயர். வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை குறைந்தது இரண்டு நாள் முதல் அதிகபட்சம் இரண்டு வாரம் என்கிறார்கள். இருந்தாலென்ன? அதற்குள் பறக்கும் பூக்களாகச் சுற்றும் அவை நம் உள்ளத்தையும் ஆனந்திக்க வைக்கின்றனவே!

கு. சிவசங்கர், உறுப்பினர் எண் : 1167, விளாத்திகுளம்



வரிக்குதிரை

I. 1. அச்சு இல்லாத சக்கரம்; அழகு கூட்டும் சக்கரம்; விதவிதமான சக்கரம், விலைக்குக் கிடைக்கும் சக்கரம் - அது என்ன?

2. காலையில் கோட்டை கட்டி, கடும் பகலில் யுத்தம் செய்து, மாலையில் விரித்துப்போடும் மகாவீரன் - அவன் யார்?

3. பந்துபோல் உருட்டி, தோசை போல் தட்டி, வெய்யிலில் காட்டி, வெந்நீருக்கு மாட்டி - அது என்ன?

4. மஞ்சள் பெட்டி, மரக்கால் பெட்டி ஒரு காலும் திறக்காப் பெட்டி - அது என்ன?

- கி.சிந்து, உ. எண் 786, மயிலாடுதுறை

II. 1. உருவத்தில் சிறியவன்; உழைப்பில் பெரியவன் - அவன் யார்?

2. ஓங்கி வளர்ந்தான்; ஒரு பக்கம் சாய்ந்தான் - அவன் யார்?

3. உருவமில்லாதவன், சொன்னதையே திருப்பிச் சொல்வான் - அவன் யார்?

4. அடிக்காத பிள்ளை; அலறித் துடிக்கிறாள் - அவள் யார்?

- வ.கீர்த்தனா தேவி, உ. எண் 1000, திருவண்ணாமலை

III. 1.குண்டு கறுப்பச்சிக்கு காது ரெண்டும் பெருசு; கண்ணு ரெண்டும் சிறிசு - அவள் யார்?

2. யாரும் துரத்தவில்லை. ஆனாலும்

ஓடுகிறான் - அவன் யார்?

3. அன்றாடம் சட்டை உரிக்கும். பாம்பு அல்ல - அது எது?

4. பழமே ஆகாத காய் - அது எது?

5. பயிரில்லாத காட்டில் உயிரில்லாதவன் நிற்க மாட்டான் - அவன் யார்?

6. குழாயில் தப்பி குடத்தில் பிடிபட்டான் - அவன் யார்?

- ஜே. தனலக்ஷ்மி, கோவை

IV. 1. அண்ணன் கறுப்பு, தலைப் பாகை பச்சை - அது என்ன?

2. வரிக்குதிரை ஓடியது, வாய்ப்பாட்டு பாடியது - அது என்ன?

3. குடிக்கத் தண்ணீர் உண்டு, குளிக்க தண்ணீர் இல்லை - அது என்ன?

- உ.ரியாஷ், கீழக்கரை

ராட்டு?

V. 1.பாத்திரம் ஒன்று, பாதரசம் இரண்டு - அது என்ன?

2. துடுப்பு உண்டு, படகு இல்லை. பசிக்கு விருந்து, நோய்க்கு மருந்து - அது என்ன?

3. வால் ஆயுதம் வைத்திருப்பான். வம்பு செய்தால் ஆபத்து - அவன் யார்?

4. ஆயிரம் குச்சிகளுக்கு, ஓர் அழகான அரை ஞாண் கயிறு - அது என்ன?

5. பால் குடிக்காமலே பருக்கும். நோயில்லாமலே இளைக்கும் - அது என்ன?

- ந.பிருந்தா, ஏழாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் பள்ளி, உ. எண் 1098, மயிலாடுதுறை

VI. 1. உதைத்தாலும் திரும்பி வருவான் - அவன் யார்?

2. சிறுத்த உருவக்காரன் ; கார குணத்துக்காரன் - அவன் யார்?

3. தலையில் அழுத்தினால் தாளில் முத்திரை தருவான் - அவன் யார்?

4. கதவுக்குச் சொந்தக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் - அவன் யார்?

5. ஆடாமல் இருப்பான், அவன் ஆடினால் நம்மையும் ஆட்டுவான் - அவன் யார்?

- ம.அக்ஷயா, உ. எண் 1346, மூன்றாம் வகுப்பு, ஜெயம் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி, அரூர்

விடுகதைகள்

VII. 1. இரவல் கிடைக்காது; இரவில் கிடைக்கும் - அது என்ன?

2. இட்டேன்; எடுக்க முடியவில்லை; பூசினேன். எடுக்க முடியவில்லை - அது என்ன?

- பா.கணேசன், ஒன்பதாம் வகுப்பு, வடபுதுப்பட்டி



I. 1.வளையல், 2.சலவைத் தொழிலாளி, 3.வறட்டி, 4.வயிறு **II.** 1.எறும்பு, 2.மூங்கில், 3.எதிரொலி, 4.சங்கு **III.** 1.யானை, 2.ஆறு, 3.காலண்டர், 4.தேங்காய், 5.சோளக்காட்டு பொம்மை, 6.தண்ணீர் **IV.**1.பனை மரம், 2.இசைத்தட்டு, 3.தேங்காய் **V.** 1.முட்டை, 2.மீன், 3.தேள், 4.துடைப்பம், 5.நிலா **VI.** 1. கால்பந்து, 2.கடுகு, 3.ரப்பர் ஸ்டாம்ப், 4.பூட்டு, 5.பூமி **VII.** 1.தூக்கம், 2.கோலம், மஞ்சள்



வியர்ப்பது ஏன்?

நம் உடலில் உஷ்ணம் மற்றும் குளிர் போன்ற பாதிப்புகளிலிருந்து உடலைக் காப்பது மற்றும் உடலின் உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது போன்ற பணிகளைச் செய்வது, மூளையிலுள்ள 'ஹைப்போதலாமஸ்' என்ற பகுதி. இது, கோடைக் காலங்களில் உடலில் ஏற்படும் அதிகப்படியான உஷ்ணத்தை வெளியேற்ற, இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்து இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இதனால் வியர்வைச் சுரப்பிகள் விரிவடைந்து, உடலில் உள்ள அதிகப்படியான

ஜி.லக்ஷ்மி, பன்னிரண்டாம் வகுப்பு,


பல்லி கீழே விழாமல் சுவர்மேல் எவ்வாறு விரைந்து செல்ல முடிகிறது?

பல்லிகளின் கால் அடிப்பாகம் கோப்பை போன்ற அமைப்பைப் பெற்றுள்ளது; இதனை 'ஒட்டிக் கொள்ளும் தாள் படலம்' என அழைப்பர். பல்லி தனது கோப்பை வடிவக் கால்களை சுவரில் அழுத்தியவுடன், காலின் உட்பகுதியில் இருக்கும் காற்று வெளியேறி அவ்விடத்தில் குறைவான அழுத்தம் உண்டாகிறது. இந்நிலையில் வெளிப்புறத்தில் காற்றழுத்தம் மிகுதியாக இருப்பதால், பல்லியின் கால்கள் சுவரில் உறுதியாகப் பதிந்து கொள்கின்றன. இதனால் செங்குத்தான சுவர்மீதும் பல்லி விரைந்து செல்ல முடிகிறது.

- எஸ்.தணிகைவேல்,
பன்னிரண்டாம் வகுப்பு,
உ. எண் 762, சி.எஸ்.எம்.ந.மே.நி.
பள்ளி, காஞ்சிபுரம்

காகிதத் தாள் எரியும்போது சுருள்வது ஏன்?

காகிதத்தாள் 'செல்லுலோஸ்' இழைகளால் பின்னப்பட்டு, சுழலும் இரு உருளைகளுக்கு இடையில் நன்கு அழுத்தப்பெற்று தயாரிக்கப்படுவது. உருளைகளுக்கிடையே அழுத்தப்படும்போது, காகிதம் நன்கு உலர்த்தப்படுவதுடன் அதன் இழைகளும் நன்கு விரிவடைந்து அந்நிலையிலேயே தங்கிவிடுகின்றன. மேலும் காகிதத்தின் செல்லுலோஸ் இழைகள் ஹைட்ரஜன் பிணைப்பான்களால் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டவை. இத்தகைய காகிதத்



வெப்பம் வியர்வையாக வெளியேறுகிறது. இதனால் உடலின் வெப்பம் குறைகிறது. அதே போல், குளிர் காலங்களில் இரத்தக் குழாய்களை சுருங்கச் செய்து இரத்த ஓட்டத்தின் அளவைக் குறைக்கிறது. இதனால் வியர்வை சுரப்பது கட்டுப்படுத்தப்பட்டு, அதிகப்படியான வெப்பம் வெளியேறுவது தடுக்கப்படுகிறது. சில நேரங்களில் தேவையான வெப்பத்தை பெறுவதற்காக உடல் நடுங்கவும் ஆரம்பிக்கிறது. இதன் மூலம் நமது உடல் வெப்பச் சமநிலையைப் பெறுகிறது.

காரணம்

[redacted]29, காஞ்சிபுரம்


தான் எரியும்போது, பிணைப்பான்கள் தாறுமாறாக சிதறுண்டு போகின்றன. இதனால் காகிதம் எரியும்போது சுருண்டு பின்னர் சாம்பலாகிறது.



தர்மாமீட்டரின் நுனிப் பகுதியை-பாதரசம் இருக்கும் பகுதியை, நாக்கின் அடியில் அல்லது அக்குளில் வைத்துப் பார்ப்பர். இதற்குக் காரணம் என்ன?

உடலின் சரியான வெப்ப நிலையைக் கணக்கிட தர்மாமீட்டரின் நுனிப் பகுதி உடலோடு ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். அதாவது தர்மாமீட்டரின் நுனிப் பகுதி நாக்கின் அடிப் பகுதியோடு ஒட்டியிருக்கவில்லை என்றால், வெப்ப நிலை வாயிலுள்ள காற்று மற்றும் எச்சிலைப் பொருத்துத்தான் பதிவாகும். தர்மாமீட்டரை நாக்குக்கு அடியிலோ, அக்குளிலோ வைக்கும்போது, தர்மாமீட்டரின் நுனிப்பகுதி நம் உடலோடு ஒட்டிக் கொண்டிருப்பதால், அது உடலின் சரியான வெப்பநிலையைக் காட்டுகிறது.

- உ. ரியாஸ், கீழக்கரை



உங்கள் கைவண்ணம்!



ப.பார்த்தசாரதி,
எட்டாம் வகுப்பு,
சிங் யுனிவர்ஸ் மெட்ரிக்
பள்ளி, கடையநல்லூர்



நா.குமுதினி, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

பி.ஜே. பாரதி,
ஒன்பதாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக். பள்ளி, செஞ்சி







பி.ஏ.டி. ஹபீப் முஹம்மது, ஆறாம் வகுப்பு, உ. எண் 966, எல்.கே. மேல்நிலைப் பள்ளி, காயல்பட்டணம்

கே.ஜெ. ஷிஃபானா அஃப்ஸின், உ. எண் 913, நான்காம் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கூத்தாநல்லூர்





எஸ்.குணசேகர், ஒன்பதாம் வகுப்பு, அ. மே. நி. பள்ளி, கோயம்புத்தூர்

லட்சுமி மண் பாதை வழியே வேகமாக நடந்தாள்.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த பெண் லட்சுமி. படிப்பு மட்டுமல்ல; கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிலும் பல பரிசுகள் பெற்று சகலகலாவல்லியாக விளங்கினாள்.

அவளது கிராமத்திலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் இருந்தது பள்ளி. கிராமத்து சாலையைக் கடந்து முக்கிய சாலைக்கு வந்து அங்கிருந்து டவுன் பஸ் பிடித்துப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

அன்று லட்சுமிக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அவள் மாவட்டத்தி லேயே அதிக மதிப்பெண்கள் பெற்று முதன்மையான மாணவி யாக விளங்கினாள். அன்று பள்ளியில் நடக்கும் பாராட்டு விழாவில் மாவட்டக் கலெக்டர் பரிசு வழங்க இருக்கிறார்.

முக்கிய சாலைக்கு வந்த லட்சுமி திடுக்கிட்டாள்.

கிராமத்துப் பயணிகளுக்கு நிழற்குடையாக விளங்கிய, நூறாண்டு கடந்த மிகப் பெரிய அரசமரம் வெட்டப்பட்டுத் தரையில் கிடந்தது. டவுனுக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்த கிராமத்து ஜனங்கள் வெயிலில் நின்று கொண்டிருந்தனர்.

அந்த மரத்தை சிலர் அறுத்துக் கொண்டிருந்தார்கள். அதை ஏற்றிச் செல்ல அருகே ஒரு லாரி நின்று கொண் டிருந்தது.

அதிகாரி போல தோற்றமளித்த ஒருவரிடம் கேட்டாள் லட்சுமி.

"இந்த மரத்தை ஏன் சார் வெட்டினீங்க?"

"நாங்க ஹைவேஸ் டிபார்ட்மெண்ட். இப்போ ரோட்டை அகலப்படுத்திக்கிட் டிருக்கோம். அதனாலே இடைஞ்சலா இருக்கிற மரங்களை எல்லாம் வெட்ட றோம்."

"கவர்மெண்ட் மரம் வளர்க்கச் சொல்லுதே!"



அ. அனீஸ் ஃபாத்திமா. உறுப்பினர் எண் : 34. போடி

அறிவுரைக்கதை

"ஆமா! போக்குவரத்துக்கு இடைஞ்சலா இருக்கிற மரங்களை கவர்மெண்ட்தான் வெட்டவும் சொல்லுது."

"இது அநியாயம் சார். எங்க ஊர் ஜனங்களுக்கு நிழற்குடையா இருந்துச்சு இந்த மரம்! இதைப் போய் வெட்டிட்டீங்களே!"

அந்த அதிகாரிக்கு 'சுரீர்' என்று கோபம் வந்தது.

"இதோ பாரும்மா! இது எங்க டூட்டி. இதைக் கெடுக்காம ஸ்கூலுக்குப் போயி படிக்கிற வழியைப் பாரு!"

உயர்ந்த பரிசு!



பள்ளியில் லட்சுமிக்கு மகிழ்ச்சியே இல்லை. கலெக்டரை வரவேற்க பள்ளியே தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அவளுக்கு வெட்டப்பட்ட மரத்தைப் பற்றிய சிந்தனைதான் இருந்தது. மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் சேவை செய்த ஒரு மாமனிதர் திடீரென சில சமூக விரோத சக்திகளால் வெட்டிக் கொல்லப்பட்டு, சாலையோரத்தில் கிடப்பது போன்ற தோற்றம் அவள் மனக்கண் முன் நின்றது.

பத்து மணிக்குக் கலெக்டர் காரில் வந்து இறங்கினார்.

தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் குழு அவரை வரவேற்று விழா மேடையில் அமர்த்தினர். பின்னர் ஒவ்வொருவராக வருங்கால மாணவ சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்று பேசினர். இறுதியாகக் கலெக்டர் பேசினார்.

அடுத்து ரெஜினா டீச்சர் பரிசுக் கோப்பைகளுடன் மைக் முன்னே வந்து நின்றார்.

"நடந்து முடிந்த பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாவட்டத்திலேயே முதல் இடம் பெற்ற நம் பள்ளி மாணவி லட்சுமிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசு வழங்குவார்."

லட்சுமி மேடைக்கு சென்றபோது பலத்த கைதட்டல் எழுந்தது.

அவளைப் பாராட்டிப் பேசிய கலெக்டர் அவளுக்குப் பரிசுக் கோப்பையை வழங்கினார்.

அப்போது லட்சுமி, "சார், இந்தப் பரிசுக் கோப்பை எனக்கு வேண்டாம். இதைவிட நான் விரும்பும் உயர்ந்த பரிசு ஒன்று இருக்கிறது. அதை எனக்குத் தர முடியுமா?" என்று கேட்டாள்.

கலெக்டர் உள்பட அங்கு கூடியிருந்த

அனைவரும் அவளைத் திகைப்போடு பார்த்தனர்.

"அது என்னம்மா உயர்ந்த பரிசு?" என்று கேட்டார் கலெக்டர்.

"மரக்கன்று சார்!" என்றாள் லட்சுமி.

"மரக்கன்றா?" என்று கேட்டு மீண்டும் திகைத்தார் கலெக்டர்.

"ஆமாம் சார்!" என்று சொன்ன லட்சுமி, மைக்கின் முன்னே வந்து நின்று, தான் காலையில் கண்ட மிகப் பெரிய மரம், சாலை அகலப்படுத்தப்படுவதற்காக வெட்டப்பட்ட சம்பவத்தைக் கூறினாள்.

கூட்டத்தில் நிசப்தம்.

மீண்டும் லட்சுமி, "நான் எதிர்காலத்தில் ஒரு 'வாங்கரி மாத்தாய்' போல் வர ஆசைப்படுகிறேன். அவர் கென்யா நாட்டைச் சேர்ந்த எக்காலஜிஸ்ட். அதாவது சுற்றுச் சூழலியலாளர். அவர் 2003-ஆம் ஆண்டு அந்த நாட்டில் 3 கோடி மரக்கன்றுகளை நட்டு, சுற்றுச் சூழலைப் பாதுகாத்ததோடு, 2004-ஆம் ஆண்டு அந்த சாதனைக்கான நோபல் பரிசையும் பெற்றார்.

கிராமத்துப் பயணிகளுக்கு நிழற்குடையாக விளங்கிய, நூறாண்டு கடந்த மிகப்பெரிய அரசமரம் வெட்டப்பட்டுத் தரையில் கிடந்தது

"வெப்ப அதிகரிப்பினால் அண்டார்க்டிகாவில் உள்ள பனி மலைகள் ஏற்கெனவே உருகத் தொடங்கிவிட்டன. இந்த நிலை தொடர்ந்தால் கடலின் நீர் மட்டம் 32 அடி வரை உயரக் கூடும். இதனால் கடலோரப் பிரதேசங்கள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது. அதற்காக இயன்ற அளவு மரக் கன்றுகளை நாம் நட வேண்டும். வளர்ந்த மரங்களை வெட்டாமல் சாலைகளை அகலப்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

ஆகவே, நம் கலெக்டர் அவர்கள் மனது வைத்தால் அரசாங்கத்திடம் சொல்லி சில நூறு மரக்கன்றுகளை எனக்குக் கொடுத்தால், நிச்சயம் ஊர் முழுக்க அவற்றை நட்டு சாதனை படைப்பேன். நாம் இப்படிச் செய்தால் வெப்பம் தணியும். மழை பொழியும். பூமி குளிரும். விவசாயம் பெருகும். சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும். பூமி பிழைக்கும்" என்று கூறி நிறுத்தினாள்.


அப்போது கலெக்டரின் உதவியாளர் ஒரு மரக்கன்றோடு வேகமாக மேடையின்மீது ஏறினார்.

அவரிடமிருந்து அதை வாங்கி கலெக்டர், "மாணவி லட்சுமி படிப்பில் மட்டுமல்ல; பொது நலத்திலும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். இவர் விரும்பியபடியே இவர் ஒரு 'வாங்கரி மாத்தாய்' போல் வர வாழ்த்துகிறேன். நிச்சயம் என்னால் இயன்ற அளவு இவருக்கு மரக்கன்றுகளை வழங்க முடியும். மேலும் இந்த மாவட்டத்தில் மரங்களை வெட்டத் தடை செய்து சம்பந்தப்பட்ட துறைக்கு இப்போதே உத்தரவு பிறப்பிக்கிறேன்" என்று கூறி அந்த மரக்கன்றை லட்சுமியிடம் கொடுத்தார்.

அதைப் பெற்றுக் கொண்ட லட்சுமி கலெக்டருக்கு நன்றி கூறி மரக்கன்றோடு மேடையை விட்டு இறங்கினாள்.

மாணவர்களின் கரவொலி மீண்டும் விண்ணைப் பிளந்தது. ●

வண்ணம் தீட்டுங்கள்!



இங்குள்ள
படத்துக்கு வண்ணம் தீட்டி
மகிழுங்கள்



உலகில் மிகப்பெரிய கடிகாரம் என்ற பெருமையைப் பெற்றது 'பிக்பென்' கடிகாரம். பிரிட்டனின் தலைநகரான லண்டனில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையில் அமைந்துள்ள பாராளுமன்ற வளாகத்தில், இது கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

16.10.1834ல் வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பெரும்பகுதி சேதமடைந்தது. சர். பெஞ்சமின் ஹால் (Sir. Benjamin Hall) என்ற பொறியியல் ஆணையரின் மேற்பார்வையில், அரண்மனை வளாகத்திலுள்ள கட்டிடங்கள் மற்றும் கோபுரங்கள் புதுப்பித்துக் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

1858 ஆம் ஆண்டு இந்தக் கடிகார கோபுரம் புதுப்பிக்கும் பணி முடிவடைந்தது. இந்த கோபுரத்தின் உயரம் 315.9 அடி. இதிலுள்ள கடிகாரத்தின் எடை மட்டும் ஐந்தரை டன். இந்த கடிகாரம் எழுப்பும் ஒலி, பதினான்கு கி.மீ. தூரம் வரை கேட்கும்.

இந்த கடிகாரத்தைப் புதுப்பித்துக் கட்டிய சர். பெஞ்சமின் ஹால் பெயரால்தான், 'பிக்பென்' என்று இந்தக் கடிகாரம் அழைக்கப்படுகிறது.

முதல் உலகப் போர் சமயத்தில்(1916) இந்தக் கடிகாரத்தைப் பாதுகாப்பதற்காக, மணி ஒலிப்ப



உறங்காத பிக் பென்!

தைத் தற்காலிகமாக நிறுத்தினார்கள். தவிர, இரவு வேளைகளில் கடிகாரத்தில் பொருத்தப் பட்டுள்ள விளக்குகளும் அணைக்கப்பட்டன.

இரண்டாம் உலகப்போர் சமயத் திலும்(1939) இத்தகைய முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ஆனால், மணியோசை மட்டும் நிறுத்தப்படவில்லை. 10.05.1941ல் நடந்த ஜெர்மனிப் படைகளின் தாக்குதலில், இருபுறங்களில் இருந்த கடிகாரங்கள் சேதமடைந்தன. பின்னர் கோபுரம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.


சரித்திரச் சிறப்பு பெற்ற இந்த கோபுரத்தை சார்லஸ் பாரி என்பவரின் தலைமையின்கீழ் வடிவமைத்தவர் அகஸ்டஸ் பகின். கோபுரத் துக்கான இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்ற சமயத்தில் அவர் ஒரு குறிப்பு எழுதினார்:

'என் வாழ்நாளில் இதுபோல் நான் கடுமை யாக உழைத்ததில்லை. கடிகாரக் கோபுரத்திற் கான டிசைன்களைப் பெற்றுக் கொள்ள நாளை பாரி வருவார். அடடா... இவை எவ்வளவு அழகாக உள்ளன'.

உண்மைதான்; இன்றும் சுற்றுலாப் பயணி களைக் கவரும் பேரழகுடன் லண்டனில் காட்சி தந்துகொண்டிருக்கிறது 'பிக்பென்'.

ஜி. பிரபாகரன், உறுப்பினர் எண் : 961, காஞ்சிபுரம்


கோகுலம்
பிப்ரவரி 2010
சாதிப்பார் சாய்னா!





சிவப்பு ஒளி வாயு?

I. 1) நான்கு ஒன்றுகளை கொண்டு எழுத முடிந்த மிகப் பெரிய எண் எது?

2) மூன்று இலக்கங்கள் உள்ள ஒரு எண். அந்த எண்ணுடன் அதே இலக்கங்களைக் கூடுதலாகச் சேர்த்தால் என்ன விடை வருமோ - அது வர, எந்த எண்ணைக் கொண்டு பெருக்க வேண்டும்?

3) 9 என்ற எண்ணை மொத்தம் ஆறு தடவைகள் பயன்படுத்தி அவற்றைப் பெருக்கியோ, வகுத்தோ, கூட்டியோ, இறுதி மதிப்பு 100 வரச் செய்ய வேண்டும். முடியுமா?

- பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456, மதுரை

II. 1. 'பச்சைத் தங்கம்' என்று அழைக்கப்படுவது எது?

2. 'பச்சையம்' இல்லாத தாவரம் எது?

3. கண்ணில் உள்ள பாப்பா பாதுகாக்கப்படும் படலத்தின் பெயர் என்ன?

4. இலங்கையின் தேசியப் பறவை எது?

5. மயில் துத்தம் என்பது எந்த பொருளின் இராசயனப் பொருள்?

6. 'ட்ரகோமா' என்ற நோய் உடலின் எந்த உறுப்பைப் பாதிக்கிறது?

7. சக்தி தரும் வெப்பத்தின் அலகு எது?

8. நமது உடம்பில் இன்சுலின் திரவத்தை உற்பத்தி செய்யும் சுரப்பி எது?

9. இராமாயணத்தில் வரும் ஒற்றைக் கண் அசுரன் பாத்திரம் எது?

10. எத்திலின் தயாரிக்கப் பயன்படும் அமிலம் எது?

- த.தாரணி, உ. எண் 785,
தூய மார்ஸினா மெ.மே.நிலைப் பள்ளி, தஞ்சாவூர்



III. 1. இரத்தத்தின் திரவப் பகுதி எது?

2. 'ஆயிரம் ஏரி நாடு' எனப்படுவது எது?

3. மிகவும் விலை உயர்ந்த உலோகம் எது?

4. திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் முக்கியமானது...

- ஜெ.வியாசர், ஆறாம் வகுப்பு, தஞ்சாவூர்

IV. 1. 'சிவப்பு ஒளி' கொடுக்கும் வாயு எது?

2. மின்னூட்டம் அற்றதும் ஏறக்குறைய புரோட்டானின் நிறையைக் கொண்டதுமான ஒரு அடிப்படைத் துகள்?

3. அனைத்து நிறங்களையும் தனித்தனியே கண்டு உணர்ந்து சொல்ல முடியாத நிலையின் பெயர் என்ன?

4. உலகில் அதிகளவு நிக்கல் கிடைக்குமிடம் எது?

- எஸ்.காயத்ரி, பன்னிரண்டாம் வகுப்பு, திரு இருதய மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

V. 1. உலகிலேயே மிகப்பெரிய சிறைச்சாலை உள்ள இடம்?

2. 'மூன்று நகரங்கள்' என்று பொருள் படும் மாநிலம் எது?

3. 'நாலுகவிப் பெருமாள்' என அழைக்கப்படும் ஆழ்வார்?

- எஸ்.செந்தில்குமார், தஞ்சாவூர்


VI. 1. உலகிலேயே மிகப் பெரிய வைரச் சுரங்கம் உள்ள இடம் எது?

2. 'ஜென்டில் மேன் ஆட்டம்' என்று அழைக்கப்படும் விளையாட்டு எது?

3. கண்ணீரை வரவழைக்கும் வேதிப் பொருள் எது?

4. சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் வரும் போது ஏற்படுவது எது?

- கி.பாலாஜி, உ. எண் 657, ஐந்தாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை



மரியாதை!

பிரான்ஸ் நாட்டின் மன்னர் மாவீரன் நெப்போலியன், இங்கிலாந்தின் விஞ்ஞானி டாக்டர் ஜென்னரிடம் பெரும் மரியாதை கொண்டிருந்தார். பொதுவாகவே மற்றவர்களைப் பொருட்படுத்தாத இயல்புடைய நெப்போலியனின் இந்த நடத்தை, அவருடைய சகாக்களுக்கே பெரும் வியப்பை ஏற்படுத்தியது. இதைக் குறித்து ஒருமுறை நெப்போலியனிடம் வாய்விட்டே கேட்டார்கள் : "நம்முடைய எதிரிநாட்டைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானிக்கு, நீங்கள் இவ்வளவு மரியாதை கொடுப்பது அவசியமா? எந்த வகையில் அவர் சிறந்தவர்?"

சிறிதும் சலனமில்லாமல் வந்தது நெப்போலியனின் பதில்.

"என் போன்ற மன்னர்களின் பெருமை, போரில் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொல்வதில் இருக்கிறது. எங்களால் அந்த உயிர்களை மீண்டும் தர இயலாது.

குருபக்தி!


கிரேக்கத் தத்துவ மேதையான சாக்ரடீஸின் மாணவர் அலெக்சாண்டர். தம்முடைய ஆசிரியரிடம், அவர் பெரும் மதிப்புக் கொண்டவர். ஒருமுறை அரிஸ்டாட்டில் முன்னால் செல்ல, அவரைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்



ஆனால், டாக்டர் ஜென்னர் தாம் கண்டுபிடித்துள்ள மருந்துகளால், வைசூரி அம்மை போன்ற நோய்களிலிருந்து, ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்.

அந்த வகையில் பார்த்தால், டாக்டர் ஜென்னர் மிகவும் மதிக்கத் தகுந்தவர். அதுதான் சரி!"

அதைக் கேட்ட சகாக்கள் பெரிதும் வியந்தனர்.



சம்பவம்

அலெக்சாண்டர்.. வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது.

நதியின் ஆழம் தெரியாததால், ஒருகணம் தயங்கி நின்றார் அரிஸ்டாட்டில். அதற்குள், மடமடவென்று நதிக்குள் இறங்கி நடந்த அலெக்சாண்டர், மறுகரையை அடைந்தார். அதை கவனித்த அரிஸ்டாட்டில், தாமும் ஆற்றைக் கடந்து அப்புறம் சேர்ந்தார்.

மறுகரையை அடைந்த பின்னர், அரிஸ்டாட்டில் கோபமாகச் சொன்னார்:

"குருவைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று உனக்குச் சொன்னதை நீ மறந்துவிட்டாய். எனக்கு முன்னால் நீ எப்படிப் போகலாம்?"

அதைக்கேட்ட அலெக்சாண்டர் பணிவாகச் சொன்னார்:

"குருவே, தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஆழம் தெரியாத இந்த நதியில், நீங்கள் முதலில் இறங்கி, தங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டு விடக்கூடாதே என்றுதான் நான் முதலில் இறங்கினேன்"


அதைக்கேட்ட அரிஸ்டாட்டில் "உனக்கு ஏதாவது நேரிட்டால், என்னாவது?' என்றார் மேலும் கோபமாக. ஆனாலும், அலெக்சாண்டர் உறுதி மாறாமல் சொன்னார் :


"ஆயிரம் அலெக்சாண்டர்களை தங்களால் உருவாக்க முடியும். ஆயிரம் அலெக்சாண்டர்கள் சேர்ந்தாலும், தங்களைப் போன்ற ஒரு குருவை உருவாக்க முடியாதல்லவா?"

அதைக் கேட்ட அரிஸ்டாட்டில், அலெக்சாண்டரை தம்முடன் அணைத்துக் கொண்டார்.

த. மணிமோகன். உறுப்பினர் எண் : 892, வெள்ளக்கோவில்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!





இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள். விடைகள் 56ம் பக்கம்

கனம்தான் காரணம்!

எஸ். வினீத் மாதவன்.
உறுப்பினர் எண் : 1996, மதுரை
படம் : பிள்ளை





நியூயார்க்கிலுள்ள ஒரு ரெஸ்டாரெண்டில் உலகிலேயே மிக விலையுயர்ந்த ஐஸ்கிரீம் விற்பனை செய்கின்றனர். 'புட்டிங் ஹாட் சாக்லேட்' என்ற ஐஸ்கிரீமின் விலை வெறும் பத்து லட்ச ரூபாய்தான்! இதில் 28 வகையான விசேஷித்த கொக்கோ ஃப்ளேவர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மீது கிரீம் தடவி அதன் மேல் பகுதியில் 23 காரட் தங்கத் துகள்கள் தூவப்பட்டிருக்கும். அதோடு ஐஸ்கிரீம் செய்யப்படும் கப் மற்றும் ஸ்பூன் 18 கேரட் தங்கத்தால் செய்யப்பட்டு வைரத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெண்கள் அணியும் பிரேஸ்லெட் ஒன்றும் பரிசாகத் தரப்படுகிறது.

ஐஸ்கிரீம் விலை பத்து லட்சம்!



வினோத பேனா

நாம் எழுதுவதற்குப் பயன்படுத்தும் பேனாவை விண்வெளி வீரர்கள் பயன்படுத்த முடியாது. காரணம் அங்குள்ள காற்றழுத்தம்தான்.

விண்வெளியிலும் பயன்படுத்தக் கூடிய சிறப்புப் பேனாவை பிஷர் என்பவர் கண்டுபிடித்தார். முழுக்க புவியீர்ப்பு அற்ற நிலை, தண்ணீருக்கு அடியில், தலை கீழாக.. என்று எந்தச் சூழ்நிலையிலும் அந்தப் பேனாவால் எழுத முடியும். அதிகபட்ச வெப்பநிலையால்கூட இந்தப் பேனாவின் மை பாதிக்கப்படாது. அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்வெளி



வீரர்கள் இந்தப் பேனாவைப் பயன்படுத்துகின்றனர்.

காஸ்ட்லி ஹோட்டல்

பஹாமாஸ் என்ற தீவில் உள்ள 'கிரிஸ்டல்' ஹோட்டலில்தான் உலகிலேயே அதிக அளவுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இங்கு ஒரு நாள் தங்குவதற்கு எவ்வளவு வாடகை தெரியுமா? ரூ.9 லட்சம். என்ன சிறப்பு இங்கே?

'கிரிஸ்டல்' ஹோட்டலில் புழக்கத்திலிருக்கும் அத்தனை பொருட்களும் தங்கத்தால் ஆனவை!





* கிரிஸ்டல் ஹோட்டல்

தங்க மரம்!

தாய்லாந்தின் தேசிய மரமாகக் கொண்டாடப்படுவது 'கோல்டன் ஷவர் ட்ரீ' (Golden shower Tree). தெற்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட இம்மரம், பாகிஸ்தான், இந்தியா, பர்மா மற்றும் இலங்கையெங்கும் பரவியுள்ளது. ரத்தம் மற்றும் வயிறு சம்பந்தமான குறைபாடுகளுக்கு மருந்துப் பொருளாகவும் இது பயன்படுகிறது. 2006-2007ஆம் ஆண்டு நடைபெற்ற மலர்க் கண்காட்சியை அடுத்து, 'Royal Flora Ratchaphurek' என்று தாய்லாந்து மொழியில் குறிப்பிடப்படும் இந்த மரத்தின் தமிழ்ப் பெயர் என்ன தெரியுமா? கொன்றை! (சிவனுக்கு விசேஷமான மலர்!)

* தங்க மரம்



ஏ.ஸ்ரீபாரதி, உறுப்பினர் எண்: 919, கும்பகோணம்

குலுங்கிச்



"உனக்கு மறுபிறவியில நம்பிக்கை உண்டா?"

"உண்டு சார். ஏன் கேட்கிறீங்க?"


"போன வாரம் செத்துப் போனதா சொல்லி லீவு போட்டியே, அந்தப் பாட்டி உன்னைப் பாக்க வந்திருந்தாங்க."

- பா.சத்யா, பதினொராம் வகுப்பு, அரசினர் மே. நி. பள்ளி, பெரம்பலூர்



"தாஜ்மஹாலுக்கு சிவப்பு பெயிண்ட் அடிச்சா என்னாகும்."

"அதிக செலவாகும்."



சிரிக்க..!

கலகலா காலனி!



"நீங்க சொன்ன ஜோக்கைக் கேட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சேன் சார்."

"ஏம்மா?"

"அப்ப நான் ஆட்டோவுல போய்க்கிட்டிருந்தேன்."



"நாய் கடிக்கு என்ன செய்யணும்?"

"நாய் கிட்டே காலை காட்டணும்."

- ந. பிருந்தா,
உ. எண் : 1098,
மயிலாடுதுறை



- ஆர்.கதிர்வேல், உ. எண் : 864, நம்பியூர்

பெரும் குழப்பத்தில் இருந்தார் மன்னர் மார்த்தாண்டன். 'யார் சொல்வது உண்மை?' என்ற குழப்பம் நீடித்தது அவருக்குள்.

'தன்னுடைய மனைவியையும் குழந்தையையும் அபகரித்து விட்டார்கள்' என்று புகார் கொடுத்த வணிகனின் முகத்தில் பதற்றம் தென்பட்டது.

'வேலை தேடிப் புறப்பட்டு வந்தோம்' என்று சொல்லும் இந்த மூன்று சகோதரர்களின் முகத்திலும் குற்றவாளிகளுக்குரிய அச்சமில்லை.

சற்று யோசித்த மன்னர், அமைச்சரிடம் ஏதோ சொன்னார். அதைத் தொடர்ந்து, ஒரு பெட்டியை அவையினுள் கொண்டு வந்தார்கள் சேவகர்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களை நோக்கிக் கேட்டார் மன்னர் :

"இந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம். அப்போதுதான் நீங்கள் சொல்வது உண்மையென்று நம்ப முடியும்."

மறுவினாடி, சகோதரர்களில் மூத்தவன் சொன்னான் :

"உள்ளே உருண்டையான பொருள் இருக்கிறது."

"அது மாதுளம்பழம்" என்றான்



சகோதரர்கள்!

அடுத்தவன். ''அது காயாக இருக்கிறது'' என்றான் மூன்றாமவன்.

பெட்டியைத் திறந்து பார்த்த அனைவரும் வியந்தனர். அவர்கள் சொன்னது போலவே பெட்டியினுள் ஒரு மாதுளங்காய் இருந்தது.

மன்னன் ஆச்சர்யமாய்க் கேட்டான் : ''எப்படி இதை ஊகித்தீர்கள்?''

''பெட்டியைக் கொண்டு வரும்போது உள்ளே ஏதோ உருளும் சத்தம் கேட்டது. அதனால் உருண்டையான பொருள் என்றேன்'' என்றான் முதலாமவன்.

''மாதுளம் பழத் தோட்டத்திலிருந்து வீரர்கள் வந்ததால், மாதுளம் பழமென்று ஊகித்தேன்'' என்றான் அடுத்தவன்.

''இது மாதுளை பழுக்கும் காலமில்லை. அதனால் காயென்று சொன்னேன்'' என்றான் மூன்றாமவன்.



மன்னன் அவர்களின் அறிவுக் கூர்மையைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான்.

''உங்களை என்னுடைய அமைச்சர்களாக ஏற்றுக் கொள்கிறேன். இப்போது சொல்லுங்கள். அவர் மனைவியும் குழந்தையும் ஒட்டகத்தில் சென்றதையும், அது ஒரு கண்ணில்லாத பெரிய ஒட்டகம் என்பதையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?''

அவர்கள் சொல்லப் போகும் பதிலை மன்னன் மட்டுமல்ல; அவையில் இருந்த அனைவரும் அறிய பெரிதும் ஆவலாக இருந்தனர்.

மூத்தவன் சொன்னான் : ''மன்னா, பாதையில் இருந்த கால் தடங்கள் சராசரி ஒட்டகத்தின் கால் தடங்களைவிடப் பெரிதாக இருந்தன. அதனால் பெரிய ஒட்டகம் என்று நினைத்தேன்.''

''பாதையின் வலது பக்கம் இருந்த தழைகள் மட்டுமே தின்னப் பட்டிருந்தன. அதனால், அந்த ஒட்டகத்துக்கு ஒரு கண்ணில் மட்டுமே பார்வை உண்டு என்று ஊகித்தேன்'' என்றான் அடுத்தவன்.

'சிறிது தூரத்தில் ஒட்டகம் ஓய்வெடுத்த அடையாளமும், அதனருகே இரு ஜோடி காலடித் தடங்களும் தென்பட்டன. அதைக் கொண்டு, அதில் வந்தவர்கள் ஒரு தாயும், குழந்தையும் என முடிவு செய்தேன்' என்றான் மூன்றாமவன்.

இதைக்கேட்டு அனைவரும் வியந்து கொண்டிருந்தபோதே, அந்த வணிகனின் மனைவி குழந்தையுடன் அவைக்குள் வந்தாள். அவளையும், குழந்தையையும் கண்ட வணிகன், கவலை நீங்கியவனாக மன்னனிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

மன்னன் விரும்பியபடியே அமைச்சர்களான சகோதரர்கள் மூவரும், தங்கள் அறிவால் நாட்டுக்கும், மக்களுக்கும் நலம் சேர்க்க ஆரம்பித்தார்கள்.

ஜி. எஸ். ஸ்ரீமதி. உறுப்பினர் எண் : 1382. மொடச்சூர்

திறமை

சுட்டீஸ் கைவண்ணம்!

ஸ்ரீ. சுப்ரஜா,
நான்காம் வகுப்பு, உ. எண் 876,
ஆரூர் வித்யா மந்திர்,
திருவாரூர்





எஸ்.நவமணி, ஐந்தாம் வகுப்பு,
தாமரை இண்டர்நேஷனல் பள்ளி,
தஞ்சாவூர்

எம்.வி. முத்து சண்முக ராஜா,
மகாத்மா மெட்ரிக். பள்ளி, மதுரை






எம்.சரவணன், ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ சங்கர வித்யாலயா, சென்னை

புள்ளிகளை இணையுங்கள்

கண்ணாமூச்சி



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்

விடைகள் பக்கம்



சரியான்னு பாருங்க!

I. 1) 11^{11}, 2) 1001-ஆல் பெருக்க் வேண்டும். 405 x 1001 = 405405 3) 999 - 99 = 900. இதை 9-ஆல் வகுக்கவும். 900 ÷ 9 = 100

II. 1.காடு, 2.காளான், 3.கார்னியா, 4.காட்டுக்கோழி, 5.காப்பர்சல்பேட், 6.கண், 7.கலோரி, 8.கணையம், 9. கபந்தகன், 10.கந்தக அமிலம்

III. 1.பிளாஸ்மா, 2.பின்லாந்து, 3.பிளாட்டினம், 4.பிரமோத்சவம்

IV. 1. நியான், 2.நியூட்ரான், 3.நிறக் குருடு, 4.நியூகோலடோனியா

V. 1.திஹார், 2.திரிபுரா, 3. திருமங்கையாழ்வார்

VI. 1.கிம்பெர்லி, 2.கிரிக்கெட், 3.கிளிசரின், 4.கிரகணம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.மாட்டின் நாக்கு,
2.மாட்டின் கழுத்திலுள்ள மணி,
3.கரும்பின் கணு, 4.சிறுமியின் கால்,
5.சிறுமியின் கழுத்திலுள்ள செயின்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

முதல் பிரிண்டர்!

✱ இவர் 1398ஆம் ஆண்டு ஜெர்மனியின் 'மெயின்ஸ்' என்ற நகரில் பிறந்தவர்.

✱ அவர் காலத்தில் எழுதுவதற்குப் பதப்படுத்தப்பட்ட ஆட்டுத்தோலினையே பயன்படுத்தி வந்தனர்.

✱ பிற்பாடு 'பேபைரஸ்' என்கிற கோரைப் புல் எழுதுவதற்கு பயன்பட்டு வந்தது.

✱ கையால் எழுதியே அந்தக் காலத்தில் படிகள் எடுத்தனர். இது அனைவருக்கும் சிரமமாக இருந்தது.

✱ இதனைக் கருத்தில் கொண்டு, அவர் மரத்தால் ஆன அச்சு எழுத்துக்களை உருவாக்கினார். அதன்மீது மையை தடவி பிரதிகள் எடுக்கப்பட்டன. பின்பு உலோகத்தால் ஆன அச்சு தயாரிக்கப்பட்டது.

✱ இவருடைய அச்சுக்கூடத்தில் சுமார் 25 பேர் பணியாற்றினர் என்று கருதப்படுகிறது.

✱ அச்சுக்கலை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, கிறிஸ்துவர்களின் புனித நூலான பைபிளை முதன் முதலாக அச்சிட்டார்.

✱ ஜெர்மனியில் இவருடைய உருவச்சிலை பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

✱ இவர் 'அச்சுக்கலையின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.

இவர் யார்? - கே.அனுசுயா, மன்னார்குடி



தெரியுமா?

விடை : கூடன்பர்க் (Gutenberg)

'ரேவன்' பறவை!

அண்டங்காக்கைகளுக்கு ஆங்கிலத்தில் 'ரேவன்' என்று பெயர். இந்தச் சொல்லுக்கு 'கொள்ளையடி' என்றும் பொருள்.

கழுகு, வல்லூறு போன்ற பறவைகள் தாம் வேட்டையாடிய இரையைத் தின்னும்போது, அண்டங் காக்கைகள் அந்த இரையைக் கவர்ந்து உணவாக்கிக் கொள்கின்றன.

பனிப் பிரதேசங்களிலும் அண்டங் காக்கைகள் காணப்படுகின்றன. சில அண்டங்காக்கை ரகங்களின் இறக்கைகள் நான்கு அடி நீளம் கூட இருக்கும்!

அண்டங்காக்கைகள் தங்களுக்கென்று ஓர் எல்லையை வகுத்துக் கொண்டு அதற்குள்ளாகவே வாழ்கின்றன. இந்தப் பகுதிக்குள், வேறு பகுதியில் இருக்கும் அண்டங்காக்கைகளை இவை அனுமதிப்பதில்லை.



நீர்த் தேள்கள்

தட்டையான உடல் கொண்ட பூச்சி இது. நீரில் வாழும் இதற்கும் தேளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. ஆனால், இதன் முன் கால்கள் பருமனாக இரையைப் பிடிக்கும் வண்ணம் அமைந்திருக்கும். அதனால், நீர்த்தேள் என்கிறார்கள்.

இதன் வால் நுனியிலுள்ள நீண்ட மெல்லிய கூம்புப் பகுதி இதன் சுவாசக்குழல். நீர்ப் பரப்புக்கு மேல் வரை இக்குழலை இதனால் நீட்டிக் கொள்ள முடியும்.

ஆழமற்ற குளம் குட்டைகளில் வாழும் இந்த நீர்த் தேளின் உணவு, சிறு பூச்சி வகைகள். பார்ப்பதற்கு இது, உலர்ந்த இலைச் சருகு போலிருக்கும்.



* அண்டங்காக்கை

மொராக்காவில் ஆடுகள் அதிகம். அவற்றுள் 'மொரொக் கோஸ்ஸியா' என்னும் வெள்ளாடுகள் இருக்கின்றன. அவை அர்கன் (argan) என்னும் மரத்தின் இலைகளை விரும்பி உண்ணும்.

இந்த இலைகளைத் தின்பதற்காக 'மொரொக் கோஸ்ஸியா' வெள்ளாடுகள், மரக் கிளைகளில் ஏறிவிடும்! அது மட்டுமல்ல, குரங்குகளைப்

கையுறை அணிந்த நண்டு

அறுவை சிகிச்சை செய்யும்போது மருத்துவர்கள் கையுறை அணிவது வழக்கம், ஒரு சிலர் மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொள்ளும்போது கையுறை அணிகின்றனர்.

ஆனால், சீனாவில் வாழும் 'எரியோஷியர் ஸைனன்ஸிஸ்' (eriocheir sinensis) என்ற நண்டு கையுறை அணிந்து வாழ்ந்து வருகிறது. இதனுடைய கைவிரல்களில் ஃபர் ரோமம் அடர்ந்த வளை நகங்கள் உள்ளன. இதன் காரணமாக கையுறை அணிந்தது போலத் தோற்றம் அளிக்கிறது.



* எரியோஷியர் ஸைனன் ஸிஸ்

மரம் ஏறும் ஆடுகள்!



போன்று கிளைக்குக் கிளை லாவகமாகத் தாவித் தாவிச் செல்லும். உலகிலேயே மரம் ஏறுகின்ற ஆடுகள், இந்த நாட்டைச் சேர்ந்த ஆடுகள்தான்.

மொராக்கோ - வடக்கு ஆப்பிரிக்காவில் சுமார் முப்பத்திரண்டு லட்சம் மக்கள் வசிக்கும் நாடு.

ம.விவேக், குட்டம்

பொக்கை வாய் தத்துவம்!

வசந்தராசன்

அரசன் விக்கிரமன் அவைக்குள் நுழைய, அனைவரும் எழுந்து நின்றனர்.

சிம்மாசனத்தில் அமர்ந்த விக்கிரமன் அவையோரைப் பார்த்துச் சொன்னான் :



"சில நாட்களாக என் மனத்துக்குள் ஒரு விருப்பம்! உயர்ந்த தத்துவங்களை அறிய விரும்புகிறேன். எனவே, அதற்குரிய நல்ல நூல்களை நீங்கள் கூறுங்கள். நான் அவற்றைப் படித்துப் பார்க்கிறேன். எந்த நூல் என் மனத்தை மிகவும் கவர்கிறதோ, அதை எழுதியவருக்கு உயர்ந்த பரிசுகள் அளிக்கப்போகிறேன்."

அவையிலிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலின் பெயரைச் சொல்ல ஆரம்பித்தனர். ஓர் அமைச்சர் அந்த நூல்களின் பெயர்களை எழுதிக் கொள்ள ஆரம்பித்தார். தலைமை அமைச்சர் மதிவாணர் மட்டும் எதுவும் சொல்லவில்லை. மௌனமாக இருந்தார். அவர் உதடுகளில் இலேசான புன்னகை ஒட்டிக் கொண்டிருந்தது.

இதைக் கவனித்த மன்னன் "தலைமை அமைச்சரே, நீங்கள் மட்டும் அமைதியாக இருக்கிறீர்களே. என்ன காரணம்?" என்றான்.

"அரசே! உயர்ந்த தத்துவங்களைக் கூறும் நூல்கள் பல உள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் உயர்ந்த தத்துவங்களை அறிய புத்தகங்களைத்தான் படிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. இறைவனின் படைப்பில் எல்லா இடங்களிலும் தத்துவம் இருக்கிறது. ஆனால், அதைப் புரிந்து கொள்ள நமக்கு அறிவும் அனுபவமும் தேவை" என்றார்.

விக்கிரமனின் முகத்தில் கோப ரேகைகள் கோலமிட்டன.

"உங்கள் கூற்றுப்படி இறைவனின் படைப்பில் எல்லா இடங்களிலும் தத்துவம் இருக்கிறது. அப்படித்தானே?"

"ஆம் அரசே."

"நல்லது. இன்னும் ஒரு மாத காலத்தில் நான் பார்க்கும் ஏதாவது ஒரு காட்சியை உங்களிடம் காட்டுகிறேன். அதிலிருந்து பெறக்கூடிய உயர்ந்த தத்துவத்தை நீங்கள் சொல்ல வேண்டும். அது அனைவருக்கும் மன நிறைவை அளித்தால் உங்களுக்குப் பரிசு தருவேன். இல்லையென்றால் கடுமையான தண்டனை கொடுப்பேன். சம்மதமா?" என்றான் விக்கிரமன்.

"சம்மதம்" என்றார் மதிவாணர்.

"அவை கலையலாம்" என்று கோபமாகச் சொல்லிவிட்டு, வெளியேறினான் மன்னன் விக்கிரமன்.

'என்ன நேரப் போகிறதோ' என்ற கவலையோடு அனைவரும் கலைந்தனர்.

இருபது நாட்கள் கடந்தன.

'உபயோகமில்லாத ஒரு காட்சியைக் காட்டி தலைமை அமைச்சரை மடக்கி விட வேண்டும்' என்பது விக்கிரமனின்

எண்ணம்.

அன்று சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த விக்கிரமன் சுற்றிலும் பார்த்தான். சற்று தூரத்தில் பற்கள் போன ஒரு வயோதிகர் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அவரைக் கண்ட விக்கிரமனின் முகம் திடீரென பிரகாசமாகியது. அவரை அருகே அழைத்தான். பிறகு மதிவாணரை நோக்கி, ''பற்கள் போன இந்த வயோதிகரின் வாயைப் பாருங்கள். இதிலிருந்து என்ன தத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று சொல்லுங்கள்'' என்றான் விக்கிரமன், இலேசான கேலியுடன்!

அரசவையில் இருந்தவர்கள் திகைத்தார்கள். 'தலைமை அமைச்சர் அரசனிடம் மாட்டிக் கொண்டார் என்றே நினைத்தார்கள்.

மதிவாணர் புன்னகை ததும்பச் சொன்னார் :

''அரசே! உறுதிப் போக்குடைய பற்கள் சீக்கிரம் விழுந்து விட்டன. ஆனால் மென்மைப் போக்குடைய நாக்கு இன்னமும் அழியாமல் இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் கூட கடும் போக்குடையவர்களாக இருந்தால் விரைவில் அழிந்து விடுவோம். நாக்கு போன்று, மென்மையான தன்மையோடு இருந்தால் நீண்ட நாட்கள் வாழலாம். நான் உணரும் தத்துவம் இது!''

மதிவாணரின் அறிவுக் கூர்மையைக் கண்டு அரசவையே ஆர்ப்பரித்தது.

மன்னன் அவரைப் பாராட்டி, பரிசளித்துக் கௌரவித்தான்.



✱ தோல் கொண்டு செய்யப்பட்ட ரூபாய் நாணயங்களை முதன் முதலில் வெளியிட்ட அரசர், முகமது பின் துக்ளக்.

✱ செயற்கைக் கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு ரஷ்யா.

✱ உலகில் எல்லாப் பகுதிகளிலும் எல்லா சீதோஷ்ண நிலையிலும் வசிக்கும் ஒரே விலங்கு நாய்தான்.

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

✱ ரத்தக் கொதிப்பை அளக்கும் அளவையின் பெயர் 'எம்.எம்.ஆஃப் மெர்குரி.'

✱ 'க்ளோனிங்' முறை அறிவியல் அற்புதம் என்றாலும், அமெரிக்கா 'மனித க்ளோனிங்' செய்வதை தடை செய்துள்ளது.

✱ பொதுவாக பூச்சியினங்களுக்கு சிறகு உண்டு என்றாலும், சிறகில்லாத ஒரு பூச்சியினம் மூட்டைப் பூச்சி.

✱ உலகிலேயே மிகப் பெரிய சாலைவழிப் போக்குவரத்தை உடைய நாடு இந்தியா.

✱ இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள் பதினேழு என்றாலும், மிகப் பெரிய துறைமுகம் மும்பை.

- மீ.சொர்ணம், உடுமலைப்பேட்டை

✱ அமெரிக்க வைரம், கல் வைரம் ஆகியவற்றைப் பட்டை தீட்டுவதில், உலகில் முதலிடம் வகிக்கும் இடம் திருச்சி தான்.

✱ நில நடுக்கத்தின் பாதிப்பைக் கண்டறியப் பயன்படும் கருவியின் பெயர் 'சீஸ்மோகிராப்' (seismograph).

✱ இந்தியாவில் பாதரசம் கிடைக்கும் ஒரே மாநிலம் கர்நாடகா.

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

கடலியல்

✱ உலகின் பொதுவான கடல் மட்டங்களை விட அதிகப் பள்ளத்தில் உள்ள கடல் சாக்கடல் (dead sea).

✱ 'கனிம வாயுக் கிடங்கு' என அழைக்கப்படும் கடல் கருங்கடல்.

✱ பால்டிக் கடலில், மற்ற கடல்களை விட உப்பின் சதவீதம் குறைந்து காணப் படுகிறது.

✱ ஏரி அளவே உள்ள நீர்நிலைக் கடல் 'ஏரல் கடல்'.


✱ உலகிலேயே மிக ஆழமான 'மிண்டோனா' பகுதி உள்ள கடல், பசிபிக் பெருங்கடல்.

ஒளியியல்

✱ ஒளியைவிட எப்பொருளும் வேகமாகச் செல்ல முடியாது எனக்



✱ சி.வி.ராமன்



✱ மாக்ஸ்வெல்

கூறியவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

✱ ஒளி மின் காந்தக் கொள்கையைக் கண்டுபிடித்தவர் மாக்ஸ்வெல்.

✱ மூலக்கூறுகளில் ஒளி சிதறப்படும்போது அதன் அதிர்வெண்களில் மாற்றமேற்படுவதை நிகழ்த்திக் காட்டியவர் சர்.சி.வி. இராமன்.

✱ வானின் கோள வடிவ நீர்த்துளிகளில் சூரிய ஒளிபட்டு நிறப்பிரிகை நிகழ்கிறபோது ஏற்படும் தோற்றமே வானவில்.

✱ வானவில்லை முழு வளையமாகக் கண்டால், அதை விஞ்ஞானிகள் 'குளோரி' என அழைக்கிறார்கள்.


✱ ஒரு மீட்டரில் ஆயிரம் மில்லியனில் (100 கோடியில்) ஒரு பங்கு நீளத்தை 'நானோ மீட்டர்' என அழைக்கிறார்கள்.

✱ செய்முறைக்குப் பயன்படுகிற வகையில் தொலைநோக்கியை அமைத்தவர் கலிலியோ.

✱ வானவில் தோன்றியதற்கான இயற்கைக் காரணத்தைக் கூறியதனால் சிறைப்படுத்தப்பட்ட மேதை ரோஜர் பேக்கன் (Roger Bacon).

- சிவ.மணவழகி,
தஞ்சாவூர்





✱ ஐன்ஸ்டீன்

திருச்சிக்கு முதலிடம்!

அதிசயம்



நீந்தும் விமானம்!



✱ நீந்தும் கார்

குழந்தைகளின் மாயாஜாலக் கதைகளில் மட்டுமே சொல்லப்பட்ட விஷயங்களை அறிவியல் இப்போது உண்மையாக்கி வருகிறது. நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய கார் ஒன்றை சில நாட்களுக்கு முன் அறிமுகப் படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து தண்ணீருக்குள்ளும் செல்லும் விமானத்தைத் தயாரித்துள்ளது இங்கிலாந்து.

இங்கிலாந்து ராணுவத்துக்குச் சொந்தமான 'சப் ஏவியேட்டர் சிஸ்டம்' என்ற அமைப்பு, இந்த அதிரடி விமானத்தைத் தயாரித்துள்ளது. இந்த அதிசய விமானத்தின் சிறப்புகள் :

✱ தரை, ஆகாயத்தில் செல்வது போலவே தண்ணீருக்குள்ளும் வேகமாகச் செல்லும்.

✱ பேட்டரிகளைக் கொண்டு இயங்கும் இந்த விமானம், ஆயிரம் அடி ஆழத்துக்குக் கீழும் தண்ணீரின் அழுத்தத்தை தாங்கி இயங்கும் திறனுடையது.

✱ 11 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது.

✱ இதன் இறக்கைகள் பல்வேறு திசைகளிலும் திரும்பிச் செல்ல உதவியாக இருக்கும்.

✱ ஆளில்லாமலும் இயக்க முடியும்.

✱ 360 டிகிரி சுற்றிலும் (எதிரிகளை) கண்காணிக்கும் வசதி உள்ளது.

✱ மற்ற நீர்மூழ்கிக் கப்பல்களைப் போலவே சப்தமின்றி இயங்கி, எதிரிகளை நிலைகுலையச் செய்யும்.

✱ இந்த விமான தயாரிப்புப் பணியில் பங்குபெற்ற ஓர் ஆய்வாளர், "தண்ணீருக்குள் இயங்கும் வகையில் 22 அடி நீளமுள்ள 2 குட்டி விமானங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தயாரிக்க, 1.20 கோடி செலவாகியது. இவற்றின் வேகத்தை அதிகரிக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது" என்கிறார்.

- பொ.கார்த்திகேயன், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, கோவை

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1451 ப.ஹரிப்ரியா, மூன்றாம் வகுப்பு, எஸ்.வி.எம். மேனிலைப் பள்ளி, திருவலம்

1452. டி. கிஷோர் குமார், எட்டம் வகுப்பு, நேரு உ.நி. பள்ளி, பழவந்தாங்கல்

1453. கே.பரத், பத்தாம் வகுப்பு, ஸ்ரீவிஜய் வித்யாலயா மெட்ரிக் மே.நி. பள்ளி, ஓசூர்

1454. த.அருணாசலம், பத்தாம் வகுப்பு, மணி மேனிலைப் பள்ளி, கோவை

1455. பா.கு.ஹரிணி, மூன்றாம் வகுப்பு, புனித ஜான் டி.பிரிட்டோ மழலையர் பள்ளி, பள்ளாங்கோயில்

1456. ஈ.ஹேமலதா, முதல் வகுப்பு, நடேசன் பள்ளி, மண்ணிவாக்கம்

1457. கே.அபிநயா, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீவிஜய் வித்யாலயா மெட்ரிக் மே.நி. பள்ளி, ஓசூர்

1458. பா.ஹேமாஸ்ரீ, ஏழாம் வகுப்பு, சிஷ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வேங்கிக்கால்

1459. பி.ஏ. சச்சின், இரண்டாம் வகுப்பு, வி.ஈ.டி. பள்ளி, பெங்களூரு

1460. ரெ.நந்தினி, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீமாணிக்கம் மே.நி. பள்ளி, சிவபுரம்

1461. மா.அமுதன், நான்காம் வகுப்பு, செயின்ட் ஜோஸப் மழலையர் பள்ளி, பல்லவகுப்பம்

1462. பி.அனுசூயா, எட்டாம் வகுப்பு, எஸ்.எஸ்.கே.வி. மேனிலைப்பள்ளி, காஞ்சிபுரம்

1463. எஸ்.நமசிவானி, ஆனந்த் நர்ஸரி பள்ளி, திருப்பரங்குன்றம்

1464. ரா.ஷண்மதி, எட்டாம் வகுப்பு, ராம்நகர் சபர்பன் மெட்ரிக் பளளி, கோவை



1465. வி.அலங்காரப்ரியன், நான்காம் வகுப்பு, நேஷனல் பள்ளி, மாதவரம்
1466. வி. சுஜா, ஐந்தாம் வகுப்பு, நேஷனல் பள்ளி, மாதவரம்
1467. த.கவின், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்
1468. பி.ஏ. சூர்யா, ஏழாம் வகுப்பு, வி.ஈ.டி. பள்ளி, பெங்களூரு
1469. என்.பாலாஜி, ஏழாம் வகுப்பு, நடேசன் பள்ளி, மண்ணிவாக்கம்
1470. பி.தமோதரன், ஐந்தாம் வகுப்பு, வாத்சல்யா கல்விக்கூடம், சென்னை
1471. இரா.அழகிய சிங்கன், ஏழாம் வகுப்பு, பெத்தி செமினேர் மே.நி. பள்ளி, புதுச்சேரி
1472. வி.கௌசிக் பிரசாந்த், பத்தாம் வகுப்பு, அமிர்தவித்யாலயம், கோவை
1473. சி.யுவராஜ், எட்டாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1474. ஜே.டோனி மைக் ஷிபு, ஏழாம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நெல்லை
1475. ஜி.எஸ்.சபரி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசினர் மே.நி. பள்ளி, கோபி
1476. ஆர்.விமல்ராஜ், ஆறாம் வகுப்பு, ஸ்ரீவிவேகானந்த வித்யாவன உயர்நிலைப் பள்ளி, திருச்சி
1477. என்.எம்.பிரீத்திகா, ஐந்தாம் வகுப்பு, சாந்தி பள்ளி, உடுமலைப் பேட்டை
1478. பி.ராகுல், ஐந்தாம் வகுப்பு, டாக்டர் பி.எம்.எஸ். மெட்ரிக் பள்ளி, சென்னை
1479. டி.தமிழ் அரசன், பதினொராம் வகுப்பு, பிரின்ஸ் மெட்ரிக் பள்ளி, சென்னை
1480. ஏ.சின்னசாமி, பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தர்மபுரி
1481. பி.கிஷோர், மதுரம் நாராயணன் சென்டர், அரும்பாக்கம்
1482. எஸ்.எம்.நரேந்திரன், ஆறாம் வகுப்பு, எஸ்.எஸ்.வி. எம்.மே.நி. பள்ளி, பம்மல்
1483. பா.சௌமியா, ஆறாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு
1484. சு.சுரேஷ், எட்டாம் வகுப்பு, அன்னை தெரசா ஆர்.சி. உயர்நிலைப் பள்ளி, வல்லம்



1485. ரா.த. அருள் பிரகதீஷ், முதல் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
1486. சே.அமல்ராஜ், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம்
1487. அஸ்.ஸ்ரீநிதி, ஏழாம் வகுப்பு, சாவறா வித்யாபவன், கோவை
1488. அ.முகம்மது ரபிக், பன்னிரண்டாம் வகுப்பு, சர். ராமசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1489. ஆ.இன்ஃபேன்ட், ஐந்தாம் வகுப்பு, டி.டி.டி.ஏ. துவக்கப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1490. ஐ. அருள், எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, குருவரெட்டியூர்
1491. ஐ. சுபா, மூன்றாம் வகுப்பு, நடேசன் பள்ளி, சென்னை
1492. பி.அபிநயா, ஏழாம் வகுப்பு, நடேசன் பள்ளி, சென்னை
1493. எம்.சரவணன், ஐந்தாம் வகுப்பு, சங்கர வித்யாலயா மெட்ரிக் பள்ளி, சென்னை
1494. எஸ்.அரவிந்தன், மூன்றாம் வகுப்பு, நடேசன் பள்ளி, சென்னை
1495. ஐ.ராதிகா, எட்டாம் வகுப்பு, நடேசன் பள்ளி, சென்னை
1496. கே.எஸ்.ஸ்ரீநாத் கோகுல், நான்காம் வகுப்பு, எஸ்.எஸ்.எம். லட்சுமியம்மாள் மெட்ரிக் பள்ளி, அப்பக்கூடல்
1497. எம்.மணிகண்டன், பத்தாம் வகுப்பு, ஆலிச்சி பள்ளி, சென்னை
1498. சுகநிஷா, சு.க., எட்டாம் வகுப்பு, ஜேக் அண்ட் ஜில் பள்ளி, தஞ்சாவூர்
1499. பி.சுமித்ரா, மூன்றாம் வகுப்பு, வி.வி.கான்வென்ட், சென்னை
1500. பி.மோகன், ஐந்தாம் வகுப்பு, வி.வி.கான்வென்ட், சென்னை

கண்ணாயிரம்!

பொது அறிவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் ஆசிரியர். 'ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது, சுற்றியிருக்கும் நாடுகளின் தன்மையையும் வளத்தையும் பொறுத்துத்தான் அமைகிறது' என்று விவரித்த ஆசிரியர், அருகிலிருந்த மாணவனை எழுப்பிக் கேட்டார் :

"இந்தியாவின் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டுள்ள நாடுகள் எவை?"

அந்தக் கேள்வியை எதிர்பாராத அந்த மாணவன், சற்றுத் தடுமாறியபின் சொன்னான் :


'பங்களாதேஷ், சீனா, நேபாளம், பூடான், பாகிஸ்தான்' என்றவன் சற்றுத் தயங்கி, 'மற்றும் தமிழ்நாடு' என்றான்.

அதைக் கேட்ட மாணவர்கள் அனைவரும் பெருங்குரலில் சிரித்தார்கள். உடனே ஆசிரியர் கேட்டார் :

"தமிழ்நாட்டை எப்படிடா இதுல சேர்த்தே?"

"வாய் தவறிச் சொன்னேன்" என்று சொல்ல வந்தவன் சமாளித்துக் கொண்டு,

ஸ்கூல் கலாட்டா



கலக்கியிருப்பேன்!

தீபாவளி முடிந்து மறுநாள்...


மாணவர்கள் அனைவரும் வழக்கமான யூனிஃபார்ம் இல்லாமல், புது உடை அணிந்து வந்திருந்தார்கள். அவர்களில் என்னுடைய வகுப்புத் தோழன் ஒருவன் ஃப்ளோரஸண்ட் நிறத்தில் பேண்ட்ஷர்ட் அணிந்து வந்திருந்தான். எல்லாருமே புத்தாடைதான் அணிந்திருந்தனர் என்றாலும், இவனுடைய டிரெஸ் பளபளவென்று ஜொலித்தது. மூன்றாம் பீரியடுக்கு வந்த சரித்திர ஆசிரியர், அவனைப் பார்த்துக் கேட்டார் :

"உடம்பு சரியில்லை!"

"என்னோட பர்த்டே டிரெஸ் ரொம்ப லூஸா இருக்கு. அதனால, அப்பா வந்து டீச்சர்கிட்ட பர்மிஷன் சொல்லிட்டு கூட்டிட்டுப் போறேன்னிருக்காரு' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் வகுப்புத் தோழி. நேரம் செல்லச் செல்ல அவள் கவனம் வகுப்பறையின் வாசல் பக்கமே இருந்தது. சொன்னது போலவே சற்று நேரத்தில் வந்த அவள் தந்தை, "சுமதி

"இதுலயும் நாடு இருக்கே; தவிர தென் எல்லையைப் பகிர்ந்திருக்கேன்னு சொன்னேன்" என்றான். அவன் சமாளிப்பதைப் புரிந்துகொண்ட ஆசிரியர், "எப்படிச் சமாளிக்கிறடா? 'பேருதான் கண்ணாயிரம்; ஆனா பார்வை ஒன்றரைக்கண்ணு'ன்னு சொல்ற மாதிரி இருக்குடா!" என்றார் சிரித்தபடி. அது முதல், அந்த மாணவனுக்கு 'கண்ணாயிரம்' என்று பட்டப் பெயர் வந்துவிட்டது.

- மு.அருண்குமார்,
உ. எண் 670, ஓசூர்



"என்னடா 'பிரபுதேவா'ன்னு நினைப்பா? பளபளக்கிற மாதிரி டிரெஸ் போட்டுட்டு வந்திருக்கே? என்ன விஷயம்?"

அதைக் கேட்ட மாணவர்கள் சிரித்தார்கள். ஆனாலும், அவன் கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல், "இல்லை சார். பிரபுதேவா மாதிரி இன்னும் வளரலை சார். அப்படி என்னை நினைச்சா, இவ்வளவு சாதாரணமாவா டிரெஸ் பண்ணுவேன். இன்னும் ஜொலிக்கிற மாதிரி பண்ணி கலக்கிட மாட்டேன்?" என்றான் அப்பாவிபோல.

அவன் சொன்னதைக் கேட்ட ஆசிரியர் மட்டுமல்ல; மாணவர்களும் கலகலத்தார்கள்.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபி

யின் பாட்டிக்கு உடம்பு சரியில்லை. அதான் கூட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றார். அதைக் கேட்ட என் தோழி படபடப்பாய், "அப்படின்னா, இன்னிக்கு நாம டிரெஸ்ஸை மாத்தப் போகலியா?" என்றாள் வேகமாக. அதை எதிர்பார்க்காத அவள் தந்தை அசடு வழிய, டீச்சர் அதிர்ந்து போனார். தாமதமாய் விஷயம் புரிந்த தோழியோ, திருதிருவென விழித்தபடி நின்றாள். பொங்கி வந்த சிரிப்பை அடக்க நாங்கள் தலைகுனிந்து கொண்டோம்.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி



நரிக் காய்ச்சல்!

கதை : டி. ஜானகி
படம் : பிள்ளை




சே... இப்படி வாயை விட்டு வம்பில் மாட்டுவதே வேலையாப் போச்சு!
நீலமலைக்காடு! நரி தன் குகையில்...
இது ஒண்ணுதான் வழி! அப்படியே பண்ணலாம்!
மறுநாள் காட்டில்...
அதெப்படி மணி காணாமல் போகும்?
யாரோ திருடியி...
அது யார்? முதலில் மணி; அடுத்து அவன்! கண்டுபிடி..
வழியில்...
மந்திரி! என்ன வருத்தம்?
மணியைக் காணலை. மன்னர் கோபித்தார்.
நான் உதவுகிறேன்... வாருங்கள் போகலாம்.
நிஜமாவா!?
மணி கட்டியிருந்த இடத்தில்...
இரவு மழை நின்றபின் திருடியுள்ளனர்!
எதை வைத்துச் சொல்கிறாய்!
விலங்குகள் சிந்திக்க..
ஆமாம்... மழைக்கு முன் மணியை நான் பார்த்தேன்.
அதன் பிறகு யார் வந்தது!?
இதோ... ஒரு நரியின் கால்தடம்!


அதைக் கவனித்த நரி...
ஆ...தேடி வருகிறார்கள்?! கண்டுபிடித்து விட்டார்களா? யோசி....
என்ன ஆச்சு உனக்கு? படுத்திருக்கே?
ம்... திடீர்னு ஜுரம்!
அட... முயல் சொன்னது நிஜம் தான்!
முயல் என்ன சொன்னான்?
காட்டுல 'நரிக்காய்ச்சல்' பரவுதாம்!
அதுக்கு மருந்து இல்லியா?
இருக்கு; ஆனா இல்லை.
என்ன சொல்றே?
ஆட்டுப் பால்ல வெண்கலத்தை உரசிக் குடிக்கணும்.
ஆனா.. மணியைக் காணோம்.
ஏனில்லை?... வந்து...
சொல்லு... எங்கே இருக்கு? நீதானே திருடினே?
ப்ளீஸ்... என்னை விட்ருங்க. தற்பெருமை பேசினதால, திருடற நிலை வந்தது. இனி செய்யமாட்டேன்...
சரி; பிழைச்சுப் போ!
அப்ப... நரிக்காய்ச்சல்?
அதுவா? உன்னைப் பிடிச்ச தற்பெருமைதான் நரிக்காய்ச்சல்! இப்போ போயிடுச்சில்லே?...



புதிய பகுதி

வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : எஸ்.வஜ்ரவேலு

பல தனியார் நிறுவனங்கள் சாய்னா நெஹ்வாலை 2009ன் சிறந்த விளையாட்டு வீரராக அறிவித்துள்ளன. பொதுவாக 'இந்தியாவில் நல்ல வசதிகள் இல்லை' என்று பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் குறை சொல்வார்கள். ஆனால் சாய்னா, ''இப்போது இந்தியாவில் பேட்மிண்டன் ஆட நல்ல வசதி வாய்ப்புகள் உள்ளன. அதை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதில் தான் நம் திறமை உள்ளது'' என்கிறார். சாய்னாவின் வருகையால் தான் இந்திய பேட்மிண்டன் உலகளவில் பேசப்படுகிறது. சாய்னாவின் வெற்றிகளால் தான், 'பேட்மிண்டனில் ஆதிக்கம் செலுத்தும் சீனர்களை வெல்லமுடியும்' என்கிற நம்பிக்கை மற்ற நாட்டு வீரர்களுக்கு வந்திருக்கிறது.

2010 ஜூன் 11 முதல் தென் ஆப்பிரிக்காவில் கால்பந்து உலகக் கோப்பை நடக்கவுள்ளது. அதற்கு முன்பு வெளியிடப் பட்டுள்ள தர வரிசைப்பட்டியலில் ஸ்பெயினுக்கு முத விடம். பிரேஸிலுக்கு இரண்டாம் இடம். இந்தியா? 134வது இடம்!

'டென்னிஸ் மேப்'பில் சென்னை!



✱ லியோனல் மெஸ்ஸி

தென் ஆப்பிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் என்டினி (Ntini) ஓய்வு பெறப்போவதாகச் செய்திகள் வெளியாயின. சமீபத்தில்தான் அவர் தென் ஆப்பிரிக்காவுக்காக தமது 100வது டெஸ்ட் போட்டியை விளையாடினார். ஆனால், சரியாக விளையாடாத காரணத்தால் அவர் இப்போது அணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். ஆனால், 'மீண்டும்

தென் ஆப்பிரிக்கா அணிக்காக விளையாடுவேன்' என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அர்ஜென்டினாவைச் சேர்ந்த லயோனல் மெஸ்ஸி (Lionel Messi) சென்ற ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'என்னுடைய வாரிசு மெஸ்ஸிதான்' என்று அர்ஜென்டினாவின் புகழ்பெற்ற ஆட்டக்காரர் மரடோனா சமீபத்தில் கூறியிருந்தார்.

அட்டகாசமாக நடந்து முடிந்திருக்கிறது 'சென்னை ஓப்பன்' டென்னிஸ். 'வருட தொடக்கத்தில் நடக்கவிருக்கும் ஆஸ்திரேலியன் ஓபனுக்கு இது சரியான பயிற்சிக் களம்' என்று எல்லா வீரர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். உலக டென்னிஸ் மேப்பில் சென்னையும் இடம்பெறுவது நமக்கு பெருமைதானே!



தமிழக ரஞ்சி அணியில் 16 வயதான ஆஷிக் ஸ்ரீனிவாஸ் இடம்பெற்றுள்ளார். 2009ல்




* ஆஷிக் ஸ்ரீனிவாஸ்

நடந்த ரஞ்சி ஆட்டங்களில், அவருடைய பெயரும் பந்துவீச்சும் தான் அதிகம் பேசப்பட்டன. வருங்காலத்தில் இந்திய அணியில் ஆஷிக் ஸ்ரீனிவாஸ் இடம் பிடிக்க வாழ்த்துவோம்.

நாடோடிக் கதை

குருவிக் கடவுள்!



"தாத்தா, என்னோட பென்சிலை எடுத்துட்டு தரமாட்டேங்கிறான் கோபி..!" ரம்யா கூச்சலிட, கோபியை அழைத்து அவன் பென்சிலை வாங்கிக் கொடுத்தார் தாத்தா.


"சிட்டுக்குருவி மாதிரி, மத்தவங்களுக்கு உதவி பண்ணணும். அதனால, அவங்களுக்கும் உதவி பண்ற பழக்கம் ஏற்படும்" என்றவுடன், ஏதோ கதை சொல்லப் போகிறார் என்று புரிந்து கொண்டார்கள் இருவரும். "சொல்லுங்க தாத்தா" என்றனர் உற்சாகமாய்! தாத்தா சொல்ல ஆரம்பித்தார்.

"தாகம் தாங்காம தண்ணீர் தேடி பறந்துக்கிட்டிருந்தது ஒரு சிட்டுக்குருவி. ஒரு உடைஞ்ச பானையில கொஞ்சமா தண்ணி இருந்தது. வேகமா இறங்கி அதைக் குடிச்சது. அப்ப ஏதோ ஒரு சத்தம் கேட்டது. "அம்மா பசிக்குதே. கண் இருளுதே... சாப்பிட ஏதும் கிடைச்சா தேவலையே'ன்னு யாரோ முனகற குரல்!

உடனே அந்தப் பக்கமாப் பறந்து போச்சு, அங்க ஒருத்தன் மரத்தடில சாய்ந்து கிடந்தான். அவனோட முனகல்தான்னு குருவிக்குப் புரிஞ்சது. 'என்ன பண்ணலாம்'னு யோசிச்ச படியே பறந்தது. கொஞ்ச தூரத்துல பெரிய ரொட்டித் துண்டு கிடந்தது. 'ஆ... இதைக் கொடுத்தா அவனுக்குப் பசி தீரும்'னு நினைச்ச குருவி அதைத் தூக்க முயற்சி பண்ணித்து. ஆனா, அதைத் தூக்க முடியலை. அந்த நேரம் பார்த்து, இன்னும் நாலஞ்சு சிட்டுக்குருவிகள் பறந்து வந்தன. கீழே கிடந்த ரொட்டியைப் பார்த்தவுடனே குருவிகள் எல்லாம் அதை சாப்பிட நினைச்சது. அதைப் பார்த்த முதல் சிட்டுக்குருவி "நண்பர்களே, ஒரு நிமிஷம்! கொஞ்ச தூரத்துல ஒரு மனிதன் பசியில கிடக்கிறான். இதைக் கொடுத்தா அவன் பசி தீரும். நாம பறந்து போய் வேற உணவ தேடிக்கலாம்''னு சொன்னது.

''சரி. ஆனா நாம ஏன் உதவி பண்ணணும்? அவங்க நமக்கு உதவி செய்யறாங்களா?''ன்னு மத்த குருவிகள் கேட்டன. அதைக் கேட்ட முதல் குருவி சொல்லித்து ''அப்படிச் சொல்லாதே! உதவின்னா கேட்காமலே செய்யணும். தவிர, ஒருத்தர் உதவினதுக்காக நாமும் உதவினா, அதுக்குப் பேர் உதவி இல்லை; நன்றி! அந்த மனிதனால எழுந்து நடக்கக்கூட முடியலை. நம்மால இன்னும் பறந்து இரை தேட முடியும். அதனால, இந்த உதவியை நிச்சயமா நாம செய்யணும்.''

இதைக் கேட்டவுடனே, எல்லாக் குருவிகளுமாச் சேர்ந்து அந்த ரொட்டியைத் தூக்கிட்டுப் பறந்துச்சு. இந்தக் காட்சியை இரண்டு வேடர்கள் பார்த்தாங்க. ''டேய், நல்ல சான்ஸ்! மொத்தமாய்ப் பிடிச்சுடலாம்,'' என்றபடியே ஒருவன் கவணை உயர்த்த, மற்றவன் தடுத்தான். 'இரு, அவை என்ன செய்யுதுன்னு பார்ப்போம்'னு சொல்லி ரெண்டு வேடர்களும் பின் தொடர்ந்தாங்க. மரத்தடில சாய்ந்து கிடந்த மனிதன் மேல அந்த ரொட்டியை நழுவ விட்டன குருவிகள். மேலே ஏதோ விழுந்தது தெரிஞ்சு,



கண் முழிச்சுப் பார்த்தான் அவன். 'ஆ.. ரொட்டி? யார் கொண்டு வந்தது'ன்னு தேடினான். யாரையும் காணோம். பசி வேகத்துல அதை எடுத்துச் சாப்பிட்டான். குருவிகளைப் பின் தொடர்ந்து வந்த வேடர்கள், அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாங்க.

அந்த மனிதன்கிட்டே போய், "இந்த ஒரு ரொட்டி உனக்குப் போதாது. இதோ நாங்களும் ரொட்டி வெச்சிருக்கோம். குடிக்க தண்ணி வெச்சிருக்கோம். நிம்மதியாச் சாப்பிடு"ன்னாங்க. அதைக் கேட்ட அவன், "நீங்க யாருன்னே தெரியாது. ஆனாலும், என்னோட உயிரைக் காப்பாத்தின நீங்கதான் என் தெய்வம்"னான்.

வேடர்கள் சிரிச்சாங்க. "நாங்க கடவுள் இல்ல. ஆனா, உனக்கு ரொட்டி கொண்டு வந்து போட்ட சிட்டுக்குருவிகள்தான் கடவுள். அந்தக் குருவிகள் உதவி செய்ததைப் பார்த்துத்தான், எங்களுக்கும் உதவணும்கிற எண்ணமே வந்தது"ன்னாங்க.

அந்த மனிதன் எல்லாப் பக்கமும் பார்த்தான். தனக்கு உதவிய சிட்டுக் குருவிகளை பார்க்கணும்ன்னு நினைச்சான். ஆனால், சிட்டுக்குருவிகளையே காணும். ரொட்டியைப் போட்டவுடனே, உணவு தேடி அதெல்லாம் பறந்து போயிடுச்சே! ஆனாலும், குருவிகள் உதவி செய்யறதைப் பார்த்ததால, வேடர்களுக்கும் உதவற குணம் ஏற்பட்டுது. அதுதான் உதவறதுல இருக்குற சிறப்பு!"

சொல்லி முடித்த தாத்தா கேட்டார் :

"இதுலேர்ந்து என்ன புரிஞ்சுகிட்டீங்க?"

இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "இந்தாடா கோபி, என் பென்சிலை நீயே வெச்சுக்கோ,' என்றாள் ரம்யா. தாத்தா மென்மையாய் புன்னகை செய்தார்.

வி.ஜெயராமன்

அமேசான் காடுகளும் சஹாரா பாலைவனமும் எப்படித் தோன்றின? ஆசிரியர் : பெ.கருணாகரன். வெளியீடு: குன்றம் பதிப்பகம், 73/31, பிருந்தாவனம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. விலை ரூ.45/-

குழந்தைகளுக்கான கதை எழுதுவதில் நீதிகளை முன்னிருத்திச் சொல்வது ஒரு வகை. இன்னொரு வகை, அறிவியல், வரலாறு... என்று வாழ்வியலின் செய்திகளை உள்ளடக்கமாக்கிக் கொள்வது. பெ.கருணாகரன் இரண்டாவது வகையைச் சுலபமாகக் கையாண்டுள்ளார். 'ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள துளை, விலங்குகளை வேட்டையாடாதீர்கள், மரங்களை வெட்டாதீர்கள், குளங்களிலும் ஆறுகளிலும் தொழிற்சாலை கழிவுநீர் கலப்பது, காட்டில் அழகுப் போட்டி... என்று நடைமுறை விஷயங்களை கதைகளின் வழியே சுவைபடச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக அமேசான் காடுகளும் சஹாரா பாலைவனமும் தோன்றிய கதை, கூடுதல் சுவாரஸ்யம். புத்தகத்தின் முகப்பில் இருந்து, உள்ளே உள்ள கதைகளுக்கான ஓவியங்கள் வரை, அனைத்தும் பள்ளி மாணவர்களின் பங்களிப்பு என்பது கூடுதல் அழகு! குறிஞ்சி மலர் போல அரிய, அழகிய படைப்பு!

குறிஞ்சி மலர்!





தவளை இளவரசன்

தவளை இளவரசன். ஆசிரியர்: க்ரிம் சகோதரர்கள். வெளியீடு: நியூ ஹொரைசன் மீடியா பிரைவேட் லிமிடெட், எண் 33/5, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018. விலை ரூ.25/-

'சிண்ட்ரெல்லா' கதை என்றால், அனைவருக்குமே தெரிந்திருக்கும். புகழ்பெற்ற அந்தக் கதையை எழுதியவர்கள் க்ரிம் சகோதரர்கள். 'ஜேக்கப் லுட்விக் க்ரிம், 'வில்ஹெம் கார்ல் க்ரிம்' ஆகிய இருவரும் சேர்ந்து உருவாக்கிய கதைகள் என்பதால், 'க்ரிம் சகோதரர்கள்' என்று இவர்கள் குறிப்பிடப்பட்டனர். நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள் என்று தேடித்தேடி சேகரித்து இவர்கள் 500க்கு மேற்பட்ட கதைகளை வெளியிட்டார்கள். அவற்றில் சுமார் 200 கதைகள் மிகமிகப் பிரபலமானவை. அதிலிருந்து எட்டு கதைகளை இந்தப் புத்தக வடிவில் மொழி பெயர்த்திருக்கிறார் மாலதி சந்திரசேகரன். குழந்தைகள் விரும்பிப் படிப்பார்கள்.

- ஆர்.எஸ்.ஆர்.

கவிதைப் பூங்காவில் இடம் பெற்ற 'புத்தாண்டே வருக!' கவிதையின் ஒவ்வொரு வரியும் என்னைப் போன்ற மாணவ - மாணவியருக்கு நம்பிக்கை ஊட்டியது. - **டி.எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்** ● அழுகிய பழமே மீண்டும் குமரமாகி பழங்களைத் தருகிறது என்ற ஞானத்தைப் புரிய வைத்த படக்கதை, ஆனந்தம் தந்தது. - **ஆர்.ஜி.ஜே. ஜெய்ஹரிதா, திசையன்விளை** ● கவிதைப் பூங்கா புத்தாண்டை - படிப்பை - பொங்கலை - உழைப்பை - அனைத்தையும் அழகு தமிழில் அகங்குளிரத் தந்து சுடர்விட்டது ஜோர்! ஜோர்! - **த.சந்தனக்குமார், பி.எம்.சத்திரம்** ● என் பேரக் குழந்தைகள் விரும்பிப் படிக்கும் கோகுலத்தில், காளமேகத்தின் பாடலை விளக்கும் தமிழமுது என்னையும் கவர்ந்தது - **டி.வசந்தா, திண்டுக்கல்** ● அஜீரணம் ஏன் ஏற்படுகிறது? அதைத் தடுக்க வேண்டிய முறைகள் என்ன? என்ன சாப்பிட வேண்டும்? என்று தெளிவாகத் தந்து, மாணவர்களையும் எளிதில் புரிந்து கொள்ள வைத்ததற்கு மனமார்ந்த நன்றி. **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை** ● 'ஐம்பது கிராம் எங்கே?' சிறு கதையின் மூலம் குற்றம் செய்த ரொட்டிக் கடைக்காரர் ஒப்புக் கொண்டு அபராதத்தைக் கட்டினார் என் கதைப் படிக்கும்போது த்ரில்லிங்காகவும் இருந்தது; படிப்பினையும் ஊட்டியது. - **ஆர்.அம்பிகா, மதுரை** ● 'தமிழமுது' அருமை! காளமேகம் போன்ற புலவர்கள் இவ்வளவு அருமையாகவும், வேடிக்கையாகவும் பாடல்களைப் பாடி இருக்கின்றனர் என்பதைப் படிக்க வியப்பாக இருக்கிறது. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● 'சொந்த தந்தையே ஆனாலும், தேசத் துரோகம் என்றால் வெகுண்டு எழ வேண்டும்' என்ற நீதியை உணர்த்திய 'கமிஷனருக்கு ஒரு கடிதம்' என்ற சிறுகதை தேச தீபத்தை ஏற்றியது! - **ஆர்.ஜி.ஏ.விஜய்சாய்பாலா, திருச்செந்தூர்** ● 'சந்தோஷம் எது?' போட்டி 71ம் பக்கம் பார்க்கன்னு போட்டுட்டு 75ம் பக்கத்துக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ணி தவிக்க வைச்சிட்டீங்களே! - **ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி** ● 'இதுவும் நம்ம வேலைதான்' கவர் ஸ்டோரியைப் படித்ததும் நானும் என் அம்மாவுக்கு சிறு சிறு வேலைகள் செய்யத் தொடங்கிவிட்டேன்.- **ந.பிருந்தா, மயிலாடுதுறை** ● 'சிரிப்பலை' பகுதியில் எழுந்த அலைகள் அனைத்தும் சிரிப்பில் நனைய வைத்தன. - **சி.குணசேகரன், தஞ்சை.**



நனைய வைத்த அலைகள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 32

1 'பிக்-பென்' கடிகார கோபுரத்தை வடிவமைத்தவர் ....

2. அஸ்ஸாமின் பழைய பெயர் ....

3. விண்வெளிக்குச் சென்ற முதல் நாய் ....

4. நிறமற்ற இறகுகளைக் கொண்ட வண்ணத்துப் பூச்சி ....

5. 'கோல்டன் ஷவர் ட்ரீ' என்ற மரத்தின் தமிழ்ப் பெயர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி பரிசு ரூ.1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 28.2.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1476


1477


1478


1479


1480


1481


1482


1483


1484


1485


1486


1487


1488


1489


1490


1491


1492


1493



1494


1495


1496


1497


1498


1499


1500

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

